Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + IV

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 28 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 27 (13.09.2004) திங்கட்கிழமை இதழ்:346

சொலெக்ஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்

உங்கள் கண்களை இலவசமாக பரிசோதித்து கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளவும்

பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்று சங்குப் பற்களை கட்டிக் கொள்ளவும்



சொலெக்ஸ் மூக்கு கண்ணாடியகம்
516 ஆஸ்பத்திரி வீதி
O.P.D முன்பாக
யாழ்ப்பாணம்

Tel.Phone: 077-855328

## மீண்டும் வருகிறது கியூ யுகம்

# மோசமான நிலைக்குள் நாட்டை அரசு தள்ளிக்கொண்டிருக்கிறது!

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**அரசாங்கத்திடம் பொருத்தமான பொருளாதாரத் திட்டம் எதுவும் இல்லாததன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் விவசாய அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்க கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அடுத்துவரும் வார காலப்பகுதிக்குள் டீசல், பெற்றோல் மற்றும் சமையல் எரிவாயு என்பவற்றின் விலைகளும் உயரவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா விவசாயம் தொடர்பாக ஒரு கருத்தை வெளியிடும்போது விவசாய அமைச்சரான அனுரகுமார திஸநாயக்க மாற்று கருத்தை வெளியிடுகிறார்.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட குளங்களைப் புனரமைக்கும் திட்டத்திற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளபோதும்-9 மில்லியன் ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க தெரிவித்து வருகிறார்.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் விவசாயத்துறைக்கு 800 மில்லியனை ஒதுக்கீடு செய்யுமாறு அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க (12 ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாவி இளைஞரின் சடலம் வவுனியாவில் கண்டெடுப்பு!

(வவுனியா)

வவுனியா ராணிமில் வீதி ரம்பைக்குளம் பகுதியில் மர்மமான முறையில் இளைஞர் ஒருவர் இறந்துகிடக்கக் காணப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

வாயில் இரத்தம் வடிந்த நிலையில் வீட்டின் அறையொன்றில் தூக்கில் தொங்கியபடி கிடந்த அவரது சடலத்தை அயலவர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இறந்தவர் மல்லாவியைச் சேர்ந்த சு.வரதராஜா (வயது 27) என்பவர் எனவும் அவர் வெளிநாடொன்றிற்குச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மகாஓயா காட்டுப்பகுதியில் இரண்டு சடலங்கள் மீட்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி-பதுளை வீதியிலுள்ள மகாஓயா காட்டுப் பகுதியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இரண்டு சடலங்களை பொலிஸார் கண்பிடித்து மீட்டெடுத்தனர்.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்து அரைகுறையாகப் புதைக்கப்பட்ட நிலையிலிருந்த இந்த இரண்டு சடலங்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டு, அடையாளம் காண்பதற்காக மகாஓயா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை இரவு புல்லுமலையிலுள்ள விடுதலைப் புலிகளின் காவல்நிலை மீதான தாக்குதல் சம்பவத்தின்போது - விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் கொல்லப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்தவர்களின் சடலங்களாக இவை இருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்றில் ஐந்து துப்பாக்கிச்சூட்டுக் காயங்களும், இன்னொன்றில் இரண்டு சூட்டுக்காயங்களும் காணப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சடலங்கள் அடையாளம் காண முடியாதளவுக்கு சிதைவடைந்திருந்தன. இதனால், மஹியங்கனை நீதிவானின் உத்தரவின் பேரில் நேற்றுமாலை அரசசெலவில் இந்தச் சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு (12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடற்படைக்கு எப்படி உதவுவது என்பது குறித்து ஆராயவே இங்கு வந்துள்ளேன்!

### இந்திய கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் நான்கு நாள விஜயத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்த இந்தியக் கடற்படைத் தளபதியை விமானநிலையத்தில் வைத்து கூட்டுப்படைத் தளபதியும் கடற்படைத் தளபதியுமான வைஷ் அட்மிரல் தயா சந்தகிரி வரவேற்றார்.

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் இலங்கையில் தங்கிநிற்கும் நாட்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலரைச் சந்தித்து உரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வந்த இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிர

## புலிகளின் கிழக்குத் தளபதிகள் நேற்று மட்டக்களப்பு திரும்பினர்!

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடனான சந்திப்புக்காக கிளிநொச்சிக்கு வந்திருந்த மட்டக்களப்பு - அம்பாறை பிராந்தியத் தளபதிகள் நேற்றுக்காலை விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்ரர் மூலம் மட்டக்களப்புக்குத் திரும்பினர்.

கடந்த 3 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து கேணல் ரமேஷ் தலைமையிலான புலிகளின் தளபதிகள் கிளிநொச்சி வந்திருந்தனர்.

...

டக்களப்பு மாவட்டத் தளபதி ராம், அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தன், ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயாத்தன் ஆகியோருடன் குட்டிசிறி மோட்டார் படையணித் தளபதி கேணல் பானுவும் மட்டக்களப்புக்குச் சென்றுள்ளார்.

இதேவேளை - மட்டக்களப்பு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தொடர்ந்தும் கிளிநொச்சியில் தங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிற்கும் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெறவிருக்கும் சந்திப்பில் கலந்துகொள்வதற்காகவே கௌசல்யன் கிளிநொச்சியில் தங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

படைத் தளபதியுமான வைஷ் அட்மிரல் தயா சந்தகிரி வரவேற்றார்.

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் இலங்கையில் தங்கிநிற்கும் நாட்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முப்படைகளின் உயரதிகாரிகள் உட்பட பலரைச் சந்தித்து உரையாடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வந்த இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டுமென நீண்டகாலமாக ஆசை கொண்டிருந்தேன். இங்கு வரக்கிடைத்தமை குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த எழில்மிகு நாட்டில் தற்போதைய நிலை குறித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

ஹெலிகொப்ரா மூலம் மட்டக்களப்புக்குத் திரும்பினர்.

கடந்த 3 ஆம் திகதி மட்டக்களப்பிலிருந்து கேணல் ரமேஷ் தலைமையிலான புலிகளின் தளபதிகள் கிளிநொச்சி வந்திருந்தனர்.

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து தலைமைப்பீடத்துடன் பல்வேறு சந்திப்புக்களின்போது இவர்கள் ஆராய்ந்திருப்பதாகத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு - அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ், மட்

இதேவேளை - மட்டக்களப்பு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தொடர்ந்தும் கிளிநொச்சியில் தங்கியிருப்பதா சந்திப்பில் கலந்துகொள்வதற்காகவே கௌசல்யன் கிளிநொச்சியில் தங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# மீன்முள்ளு தொண்டையில் சிக்கி குடும்பப்பெண் பரிதாப மரணம்!

(யாழ்ப்பாணம்)

மீன் முள்ளு தொண்டையில் சிக்கிய குடுமபப் பெண் ஒருவர் பரிதாபகரமாக மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. 38 வயதான வசந்தகுமாரி என்ற பெண்ணே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - இரண்டு நாட்களுக்கு முன்னர் இவர் உணவு உட்கொண்டபோது மீன் முள்ளுத் தொண்டையில் சிக்கியது. இதனைத் தொடர்ந்து மீன்முள்ளு வயிற்றுப் பகுதிக்குள் சென்றுவிட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# கிணற்றுக்குத் தோண்டிய குழியில் புதையுண்டு தொழிலாளி மரணம்!

(அச்சுவேலி)

குழாய்க் கிணற்றுக்காகத் தோண்டப்பட்ட குழியில் மண்சரிவு ஏற்பட்டதில், அதில் சிக்குண்டு தொழிலாளி ஒருவர் மரணமான பரிதாப நிகழ்வு நேற்று அச்சுவேலியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் புத்தூர் நவக்கிரியைச் சேர்ந்த க.ஆனந்தன் (வயது 37) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

வல்லை வீதி, அச்சுவேலிப் பகுதியில உள்ள தனியார் வீடொன்றில், குழாய்க் கிணற்றுக்கான குழி தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட தொழிலாளி ஒருவர், தோண்டப்பட்ட குழியின் உட்பகுதியில் துவாரம் ஏற்பட்டதையடுத்து குழியினுள் இறங்கி அதனை அடைக்க முற்பட்டார். அப்போது, திடீரென ஏற்பட்ட மண்சரிவால் அவர் அந்தக் குழியினுள் மூடப்பட்டார்.

நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. குழியினுள் புதையுண்டவரை மீட்கும் முயற்சியில் பல நூற்றுக் கணக்கானோரும், கனரக புல்டோசரும் பணியில் ஈடுபட்டிருந்தன.

மண்ணில் புதையுண்ட தொழிலாளியின் சடலத்தை மீட்பதற்கு 16 அடி ஆழத்திற்கு மேலாக மண் அகற்றப்பட்டுத் தோண்டப்பட்ட போதும் சடலம் காணப்படவில்லை.

இதனால், அந்தப் பகுதியில் நீரூற்று ஏற்பட்டு சகதியானதால் - யாழ். மாநகரசபை தீயணைப்புப் படையினர் உதவியும் கோரப்பட்டது. தீயணைப்புப் படையினரும் இணைந்து சகதியை அகற்றிச் சடலத்தை மீட்க நேற்று நள்ளிரவு வரை முயற்சிகளை மேற்கொண்ட போதும், நேற்று நள்ளிரவுவரை அவரது உடல் மீட்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. (202)



நல்லூர் கந்தனின் நேற்றைய சப்பற திருவீதியுலாக் காட்சி


எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR
Your friend in the skies...

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2004

## 13.09.2004 முதல் 29.09.2004 வரை

நிகழும் தாரண வருடம் புரட்டாதி மாதம் திங்கட்கிழமை (13.09.2004) பகல் 10.00 மணியளவில் மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக எம்பெருமான் திருவருள் பாலித்துள்ளார். பரந்தாமன் பக்தர்கள் அனைவரும் ஆசாரசீலராய் வந்து எம்பெருமானைத் தரிசித்து இஸ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

### மஹோற்சவகால பூசை நேரங்கள் (பஞ்சாங்க நேரப்படி)

| காலை | | மாலை | |
|---|---|---|---|
| உசக்காலம் | 7.00 மணி | சாயரட்சை பூசை | 3.30 மணி |
| 2 ஆம் காலம் | 8.00 மணி | மாலைப் பூசை | 3.45 மணி |
| அபிடேகம் | 9.00 மணி | தம்ப பூசை | 4.00 மணி |
| விசேட பூசை | 9.30 மணி | | |
| தம்ப பூசை | 10.00 மணி | வசந்தமண்டபப் பூசை | 4.30 மணி |
| வசந்தமண்டபப் பூசை | 10.30 மணி | அர்த்தசாமப் பூசை | 7.00 மணி |
| உச்சிக் காலம் | 12.00 மணி | | |

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 13.09.2004 | திங்கள் பகல் | 10.00 மணி |
| சப்பறத் திருவிழா | 26.09.2004 | ஞாயிறு இரவு | 8.00 மணி |
| தேர்த்திருவிழா | 27.09.2004 | திங்கள் காலை | 8.00 மணி |
| சமுத்திரத் தீர்த்தம் | 28.09.2004 | செவ்வாய் பிற்பகல் | 5.00 மணி |
| கேணித் தீர்த்தம் | 29.09.2004 | புதன் பகல் | 10.00 மணி |
| கொடியிறக்கம் | 29.09.2004 | புதன் மாலை | 4.00 மணி |

**முக்கிய குறிப்பு**

1. பருத்தித்துறையிலிருந்து காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் ஆலயத்திற்கு விசேட பஸ் சேவை நடைபெறும்.
2. பெண்களும் குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடியளவில் குறைத்துக்கொள்ளுங்கள்.
3. ஆலய உள்வீதியில் புகைப்படம் எடுத்தல், வீடியோ படம் எடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.
4. உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் 15.09.2004 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு ஒதுக்கீடு செய்யப்படும். வாடகையைச் செலுத்தியவர்களுக்கு வழங்கப்படும்.
5. சைவசமய பண்பாட்டுக்கு உரித்தான உடைகளை அணிந்துவருதல் விரும்பத்தக்கது.

6. பண்ணிசைப் போட்டி -

பாடசாலை மாணவர்கள் பங்குபற்றலாம். விண்ணப்பங்கள் அதிபரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். போட்டி விண்ணப்ப முடிவுத் திகதி 17.09.2004, போட்டித் திகதி 18.09.2004 பகல் 9.00 மணி (கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு), 19.09.2004 பகல் 9.00 மணி (மேற்பிரிவு, அதிமேற்பிரிவு)

**கீழ்ப்பிரிவு (தரம் 4,5)**
தேவாரம்: நீள நினைந்தடியேன்...
திருப்பாவை: மார்கழித் திங்கள்...
அல்லது தூமணி மாடத்து சுட்டும்...

**மேற்பிரிவு (தரம் 9,10,11)**
பஞ்சபுராணம்
1. பூவார்மலர்கொண்டடியார்...
2. மெய்தான் அரும்பி விதிர்விதித்து...
3. நீறணி பவளக்குன்றமே...
4. மிண்டு மனத்தவர் போமின்...
5. ஐந்து பேரறிவும் கண்களேகொள்ள... குலம் தரும் செல்வம் தந்திடும்...

**மத்திய பிரிவு (தரம் 6,7,8)**
தேவாரம்: மாதர்ப்பிறைக் கண்ணியானை...
மாளினேர் விழி மாதராய்...
கற்றாம் கரியோம்பி...
திருப்பாவை: தூமணி மாடத்து சுட்டும்...

**அதிமேற்பிரிவு (தரம் 12,13)**
மேற்பிரிவுக்குரிய பஞ்சபுராணத்துடன் நாலா யிரம் திவ்யப் பிரபந்தப் பாடல் இரண்டு பாடு தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 18.09.2004 இற்கு முன்னர் நேரில் அல்லது தபால் மூலம் செயலாளர், அறங்காவலர் சபை, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில், துன்னாலை வடக்கு, புலோலி என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

7. ஆலயத்தின் பெயரால் எவ்வித நிதி வசூல் செய்ய தனி நபர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ (மடங்கள்) அனுமதி அளிக்கப்படவில்லை. அன்பளிப்புச் செய்வோர் ஆலய கருமபீடத்தில் பதிவுசெய்து பற்றுச்சீட்டுப் பெறுக.

**ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்,**
**துன்னாலை வடக்கு, புலோலி.**

(3089)

**அறங்காவலர் சபை.**



*வள்ளி தெய்வ யானையுடன் புள்ளிமயில் ஏறிவந்து*
*உள்ளிருக்கும் துன்பமெல்லாம் அள்ளிடவே வா முருகா...*

# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 30.06.2003 இற்கு முன்பு அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யா/ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | பின்வரும் திகதிகளுக்கு முன்பு அடகு வைத்த நகைகள் | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி - 104 | 30.06.2003 | 02.10.2004, 03.10.2004, 04.10.2004 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 2 | நெல்லியடி - 106 | 30.06.2003 | | |
| 3 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | 30.06.2003 | 09.10.2004, 10.10.2004, 11.10.2004 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 4 | சங்கானை - 108 | 30.06.2003 | | |
| 5 | சாவகச்சேரி - 110 | 30.06.2003 | 16.10.2004, 17.10.2004, 18.10.2004, 19.10.2004, 20.10.2004 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 6 | வல்வெட்டித்துறை - 141 | 30.06.2003 | | |
| 7 | சுன்னாகம் - 109 | 30.06.2003 | 23.10.2004, 24.10.2004, | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 8 | பருத்தித்துறை - 285 | 30.06.2003 | | |
| 9 | யாழ்.பல்கலைக்கழகம் - 162 | 30.06.2003 | 25.10.2004, 26.10.2004, 27.10.2004 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 10 | யாழ்.கன்னாதிட்டி - 284 | 30.06.2003 | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது

பிராந்திய முகாமையாளர்,
யாழ்ப்பாணம் / வன்னி

மக்கள் வங்கி
பிரதேச காரியாலயம்
(வட வலயம்)
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

# எம்மீது போர் வலிந்து திணிக்கப்பட்டால் அதனை எப்போதும் எதிர்கொள்ளத் தயார்

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**எங்கள் மீது போர் வலிந்து திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ள நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம் என தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

**றொய்ட்டர் செய்திச் சேவைக்கு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் வைத்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –**

நாங்கள் ஏற்கனவே அரசுகளுடன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக பல சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்து இருக்கின்றோம். நாங்கள் மட்டுமல்ல கடந்த காலங்களில் எமது தமிழ்த் தலைவர்களும் பல முயற்சிகளை மேற்கொண்டு பல ஒப்பந்தங்களையும் செய்துள்ளார்கள்.

அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களும் பேச்சுக்களும் இல்லாமல் செய்யப்பட்டதும் - கிழித்தெறியப்பட்டதும் வரலாறுகளாகவே இருக்கின்றன.

எமது மக்கள் நிரந்தரத் தீர்வுமுயற்சியில் களைத்துப் போய் விட்டார்கள். அதற்கான முடிவுகள் எவையும் எட்டப்படாத நிலையில்தான், அதற்கான முடிவுகள் உருவாக்கப்படும்வரை இடைக்கால நிர்வாகம் ஒன்றை நிறுவவேண்டும் என்ற அடிப்படை நிலையுள்ளது.

எமது மக்கள் இறுதியாக நடைபெற்ற தேர்தலில் தமது ஆணையை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

எம்மீதான போர் வலிந்து திணிக்கப்படும்போது அதனை எப்போதும் எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளோம். போரை எவரும் விரும்பவில்லை. ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் ஒரே நிலைப்பாட்டில் தான் உள்ளனர். போர் எம்மீது திணிக்கப்பட்டதால்தான் போரை எதிர்கொண்டோம்.

வடக்கு - கிழக்கிலுள்ள ஆயுதக் குழுக்களின் செயற்பாடு இல்லாது ஒழிக்கப்பட வேண்டும், ஆயுதக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்கள் களையப்படவேண்டும், ஆயுதக் குழுக் கள் வெளியேற்றப்பட வேண்டும் என்று போர்நிறுத்த உடன்பாட்டின் ஒரு சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது முன்பிருந்த அரசினால் இந்த நடைமுறை ஓரளவு கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் மட்டக்களப்பில் புதிய ஆயுதக் குழுக்கள் இராணுவத் தரப்புடன் இணைந்து செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பதானது இன்று அப்பகுதி மக்கள் மத்தியில் ஒரு அச்ச சூழ்நிலையை தோற்றுவித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்த வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடாகும். தமிழ் மக்களின் நிலைப்பாடும் அதுவே ஆகும் என்று அரசியற்துறைப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சேது சமுத்திரத் திட்டம்! இந்தியாவுடன் பேசவுள்ளோம்

### அமைச்சர் பௌஸி தெரிவிப்பு

சேது சமுத்திரத் திட்டத்தினால் சுற்றாடலுக்குப் பாதிப்பு வருமா இல்லையா என்பதுபற்றி ஆராய்ந்து வருகிறோம். இத்திட்டத்தால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய அரசாங்கத்தோடு கலந்துரையாடவுள்ளோம் என்று சுற்றாடல் அமைச்சர் எ.எச்.எம். பௌசி, பி.பி.சி தமிழ்ச் சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

இந்த சேதுசமுத்திரத் திட்டத்தை ஆழமாக்கினால் அதிக நீர் அந்த இடத்துக்கு வந்து பாதிப்பை ஏற்படுத்தும். அத்தோடு இந்தத் திட்டத்தினால் கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைவடைவ தோடு, வருமானமும் குறையலாம் என்று அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி மேலும் தெரிவித்தார்.

## படையிலிருந்து தப்பிச் சென்றோரை நிரந்தரமாக விலக்கும் பணி இன்றுமுதல் ஆரம்பமாகும்

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை பகுதிகளை உள்ளடக்கிய மேல் மாகாணத்தில்- இராணுவத்தில் இருந்து தப்பிச்சென்றவர்களை இராணுவத்திலிருந்து நிரந்தரமாக விலக்கிவிட மீண்டும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்றுமுதல் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை இந்த நிகழ்வு கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கொழும்பு மொறட்டுவையிலும் ஏனைய பகுதிகளிலும் பாரிய கொள்ளைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களுடன் சேர்ந்து 9 பேரைக்கொண்ட குழுவினரையும் மொறட்டுவ பொலிஸார் கைதுசெய்ததுடன் இவர்களிடமிருந்து 11 வாகனங்கள் உட்பட 25 இலட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்குமாறு முதலமைச்சர்கள் தீர்மானம்!

பதின்மூன்றாவது அரசியல் அமைபபுத் திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு கிடைக்க வேண்டிய பொலிஸ் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து மாகாண முதலமைச்சர்களும் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

சிலாபத்தில் இடம்பெற்ற முதலமைச்சர்களுக்கான மாநாட்டின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப் பட்டது.

மாநாட்டின் முடிவில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்களை பெற்றுக்கொள்வதென நாம் தீர்மானித்துள்ளோம். இவ்வாறு பெற்றுக்கொள்ளும்போது மத்திய அரசில் இருந்து மாகாண அரசின் விடயங்களில் தலையிடும் தன்மை குறைவடையும் எனத் தெரிவித்தார். (01)

## தங்க நகைகளுடன் ஒருவர் கைது

பதினான்கு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை லண்டனுக்குக் கொண்டுசெல்ல முயன்ற பிரித்தானிய பிரஜாவுரிமையுள்ள இலக்கைத் தமிழர் ஒருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

இவர் தங்கநகையை மறைத்து வைத்துக்கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அவரிடமுள்ள தங்க நகைகள் அரசுடமையாக்கப்பட்டு, அவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## தேசிய ஆலோசனைச் சபை; தமிழ் கூட்டமைப்பு நிராகரிப்பு!

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிப் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்த ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டுள்ள சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான தேசிய ஆலோசனை சபைத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்தத் திட்டத்துக்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு வழங்கக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த வியாழனன்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சந்தித்தார்.

இதன்போது, ஜனாதிபதி மேற்படி தனது திட்டத்தை எதிர்க்கட்சித் தலைவரிடம் எடுத்துக் கூறியிருந்தார். அப்போதே ஜனாதிபதியிடம், இந்தத் திட்டத்தால் பயன் எதுவும் இல்லை என்றும் தேவையில்லாமல் சபைகளை அமைத்துக் காலத்தை இழுததடிக்காமல் புலிகளின் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சுகளை ஆரம்பிப்பதே சிறந்த வழி என்றும் ரணில்விக்கிரமசிங்க கூறியதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்-

அரசாங்கம் கடந்த ஜூலை மாதம் புலிகளிடம் தமது தீர்வு வரைவொன்றைச் சமர்ப்பித்துள்ளது. அதற்குப் புலிகள் தமது பதில் வரைவை முன்வைத்துள்ளார்கள்.

இனிமேல், அதற்கு மீண்டும் பதில் வரைவு சமர்ப்பிப்பது என்றும், விதம் விதமான ஆலோசனை சபைகள் என்றும் காலத்தை இழுத் தடிக்கக் கூடாது.

கடந்த 50 வருடங்களாக ஆட்சியிலிருந்த அரசுகள் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திக் கொண்டுதான் இருக்கின்றன. இனியும் ஆலோசனை, கலந்துரையாடல் என்று குழு அமைத்துக் கூடிப் பேசிக்கொண்டிருப்பது, அன்றாடம் யுத்த பீதியிலிருக்கும் மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை மீண்டும் இழுத்தடிப்பதாகவே முடியும். ஜனாதிபதியின் இந்தப் புதிய திட்டத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரவு வழங்காது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைத்ததன் மூலம் ஐ.தே.க. அரசு மேற்கொண்டுவந்த சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி முட்டுக் கட்டை போட்டுத் தீர்வுக்கான காலத்தை இழுத்தடித்தார்.

தற்போது, மேலும் காலத்தை இழுத்தடிக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறார். அவர் அரசியல் சுயலாப நோக்குடன் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வைப் பின்தள்ளிக்கொண்டே போகின்றன. இனியும் தமிழினம் சிங்கள தேசத்தின் இத்தகைய அரசியல் கூத்துக்கு தாளம் போட்டுக்கொண்டிராது எனத் தெரிவித்தார்.

## மூன்றடுக்கு நீதிமன்ற வளாகம் திருகோணமலையில் திறப்பு!

(திருகோணமலை)

உலக வங்கி நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட மூன்று அடுக்கு நீதிமன்ற வளாகம் நேற்று திருகோணமலையில் திறந்துவைக்கப்பட்டது.

79 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த நீதிமன்ற வளாகத்தை, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சர் ஜோன் செனிவிரத்ன, சட்டமா அதிபர் கமலசபேசன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த நீதிமன்ற வளாகத்தில் ஆறு நீதிமன்றங்கள் அமையவுள்ளன.

இரு மேல் நீதிமன்றங்கள், இரு நீதிவான் நீதிமன்றங்கள், தொழில் நீதிமன்றம், மாவட்ட நீதி மன்றம் ஆகியன இந்த வளாகத் தில் இயங்கவுள்ளன.

திருகோணமலை மாவட்ட மேல் நீதிமன்றம் இன்றுமுதல் இந்த வளாகத்தில் செயற்படவுள்ளது. முன்னர் கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம் திருகோணமலை மட்டக்களப்பு, ஆகிய மாவட்டங்களை உள்ளடங்கியதாக இயங்கி வந்தது.

இரண்டு மாதத்துக்கு ஒருமுறை சுழற்சி முறையில் இரு மாவட்டங்களில் மேல் நீதிமன்றம் செயற்பட்டு வந்தது.

கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து திருகோணமலை மாவடட மேல் நீதவானாக அன்ரன் பாலசிங்கம் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் திருகோணமலை மாவட்ட நீதவானாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்ட நீதிபதியான தியாகேந்திரன் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் முன்னர் திருகோணமலை நீதிமன்ற நீதிவானாக இருந்து வந்தார்.

திருகோணமலையில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட பழமையான மாவட்ட நீதிமன்றக் கட்டிடத்திலேயே இயங்கிவந்தது.



திருமலையில் நேற்று திறந்துவைக்கப்பட்ட நீதிமன்ற வளாகத்தின் முகப்புத்தோற்றம்.

## தங்கக் கடத்தல் முறியடிப்பு 1300 மில்லியன் அபராதம்!

தங்கக்கடத்தலை முறியடிப்பதற்கு மத்திய வங்கியால் விஷேட படைப்பிரிவு அமைக்கப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகள் மூலம் தங்கக்கடத்தலுடன் தொடர்புடைய 927 பேரிடம் இருந்து 1300 மில்லியன் ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டிருக்கிறது.

கடந்த இரண்டு வருடங்கள் மட்டுமே அனுமதியின்றி 5 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான தங்கம் நாட்டுக்குள் கடத்தப்பட்டிருப்பதாக மத்திய வங்கி மதிப்பிட்டிருந்தது.

இவற்றுள் மத்திய வங்கியின் விஷேட படைப்பிரிவு நடத்திய விசாரணையின் மூலம் 900 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கக்கடத்தல் முறியடிக்கப்பட்டது-

தங்கக் கடத்தலுடன் தொடர்புடையவர்களுக்கு மீட்கப்பட்ட தங்கத்தின் பெறுமதியில் மூன்று மடங்கு அபராதமாக விதிக்க முடியுமாக இருந்தாலும் - ஒன்றரை மடங்கு அபராதமே விதிக்கப்பட்டது. இதன் மூலம் 1300 மில்லியன் ரூபா குற்றப்பணம் அறவிடப்பட்டது.

### பட்டம் வழங்கி கௌரவிப்பு

பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான மஹோற்சவத்தில் 18 தினங்களும் தசாவதாரம் எனும் தலைப்பில் தெய்வீகச் சொற்பொழிவாற்றிய ஆசிரியர் இரா.செல்வவடிவேலுகு ஆலய பரிபாலன சபையினர் பிரசங்கத் திலகம் என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

உற்சவ இறுதித் தினத்தில் ஆலய முன்மண்டபத்தில் செல்வவடிவேல் ஆசிரியருக்கு நன்றியும் பாராட்டும் வழங்கும் நிகழ்விலேயே இந்தப்பட்டம் அவருக்கு பரிபாலனசபையினரால் சூட்டிக்கௌரவிக்கப்பட்டது. (207)

# தென்னாபிரிக்கா 9 விக்கெட்டுக்களால் பங்களாதேஷ் அணியைத் தோற்கடித்தது



நடைபெற்றுவரும் மினி உலகக்கிண்ணப் போட்டியில் நேற்று எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் தென்னாபிரிக்க - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் நடந்த ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி ஒன்பது விக்கெட்டுக்களால் பங்களாதேஷைத் தோற்கடித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணித் தலைவர் முதலில் தமது அணியைத் துடுப்பெடுத்தாடப பணித்தார். இதன்படி அவ்வணியின் சார்பில் ஜாவிட் ஓமர், மொகமட் அஷ்ரபுல் இருவரும் ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர்.

பங்களாதேஷ் அணிக்கு ஆரம்பமே நன்றாக அமையவில்லை. அந்த அணியின் முதலாவது விக்கெட் இரண்டாவது ஓவரிலேயே வீழ்த்தப்பட்டது. இந்த அணியின் மொகமட் அஷ்ரபுல் 4 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் லாங் வெல்டின் பந்து வீச்சில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன்பின் அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அடுத்தடுத்து இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. இறுதியில் அந்த அணி 31.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இந்த அணி சார்பாக நபீஸ் இக்பால் 40, காலித் மசூத் 24 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர். மற்றைய வீரர்கள் எவரும் 5 ஓட்டங்களுக்கு மேல் பெறவில்லை. இதிலும் நான்கு வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாமலேயே ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் லாங் வெல்ட், என்ரினி மற்றும் நிக்கிபோஜி மூவரும் தலா 3 விக்கெட்டுக்களையும் பொலக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதன்பின் 94 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற மிகச் சுலபமான இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 17.4 ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது. இதில் கிப்ஸ் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ஸ்மித்தும், கலிஸும் ஆட்டமிழக்காமல் முறையே 42,40 ஓட்டங்களைப்பெற்றனர்.

இதில் கிப்ஸின் விக்கெட்டை பைசா கைப்பற்றினார். நேற்றைய ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணியின் மூன்று முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்திய தென்னாபிரிக்க அணியின் லாங் வெல்ட், தெரிவானார்.






# பாகிஸ்தானுடனான போட்டி சவாலாகவே அமையுமாம்!

## கங்கூலி தெரிவிப்பு



இங்கிலாந்தில் 12 நாடுகள் பங்கேற்கும் ஐ.சி.சி கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. 'சி' பிரிவில் நேற்று முன்தினம் நடந்த இந்திய - கென்ய அணிகளுக்கிடையிலான போட்டியில் வென்ற பின்னர் கங்கூலி கூறியதாவது -

இப்போதுதான் நாங்கள் பழைய நிலைக்கு திரும்பி உள்ளோம். எங்களது துடுப்பாட்டமு[ம்] பந்துவீச்சும் சிறப்பாக அமைந்திருந்தது. லக்ஷ்மன் என்னுடன் இணைந்து சிறப்பாக ஆடினார். டிராவிட்டும் கைவ்வும் அதிரடியாக ஆடி ஓட்டங்களை குவித்தது சிறப்பானது. பந்துவீச்சில் அனைவரும் சிறப்பாக வீசினார்கள். அதுவும் ஹர்பஜன்சிங் சிறப்பாக வீசி 33 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

கடந்த இரு ஆட்டங்களிலும் 90 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதம் அடிக்க முடியாமல் போனது வருத்தமளிக்கிறது.

அடுத்த ஆட்டத்தில் பாகிஸ்தானை சந்திக்கிறோம். இதில் அவர்களை நாங்கள் சவாலுடன் எதிர்கொள்கிறோம். இந்த ஆட்டம் கடும் போட்டி நிறைந்து காணப்படும். கென்யாவுடன் சிறப்பாக ஆடியது போலவே இந்த தொடர் முழுவதும் சிறப்பாக ஆடி வெற்றிபெறுவோம் என்று அவர் கூறினார்.



**மினி உலகக் கிண்ணத்தில் இன்று நடைபெறும் ஆட்டம்**

**அவுஸ்திரேலியா - அமெரிக்கா**

**மைதானம் - ரோஸ்பவுல்**

## அமெரிக்க ஓபன் ரெனிஸ்

# ரஷ்யாவின் சுவேட்லனா கிண்ணத்தை வென்றார்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் அரை இறுதி ஆட்டம் ஒன்றில் அவுஸ்ரேலியாவை சேர்ந்த ஹெவிட், ஜோகன்சன் மோதினார்கள். இதில் ஹெவிட் 6-4, 7-5, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி வெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றொரு அரை இறுதியில் உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் டெரர், இங்கிலாந்து வீரர் டிம்ஹென மனுடன் மோதினார். இதில் பெடரர் 6-3, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் ஹென்மனை தோற்கடித்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

இதன் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டத்துக்கான இறுதிப்போட்டியில் ரஷ்ய வீராங்கனைகளான சுவேட்லனா குநட்சேவும், எலீனா டிமேன்ட் டிவாவும் மோதினர். இதில் சுவேட்லனா 6-3, 7-5 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்று அமெரிக்க ஓபன் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தைக் கைப்பற்றினார். இதுவரை அமெரிக்க வீர வீராங்கனைகளே இந்தப்பட்டத்திற்கான போட்டியில் ஆதிக்கம் செலுத்தினர். இப்போது அந்த ஆதிக்கத்தை ரஷயா உடைத்தெறிந்துள்ளது. 18 ஆண்டுகளுக்குப் பிறகு இறுதிப் போட்டிக்கு ஒரு அமெரிக்கர் கூட தகுதி பெறாமல் போனது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.




# பத்தாயிரம் ஓட்டங்களை கடக்கவுள்ள பாகிஸ்தானிய வீரர் இன்ஸமாம்!



சர்வதேச ஒருநாள் போட்டியில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்களின் பட்டியலில் இந்திய நட்சத்திர ஆட்டக்காரர் டெண்டுல்கர் முதலிடத்திலுள்ளார். அவர் 339 போட்டிகளில் ஆடி 13415 ஓட்டங்களைக் குவித்து யாரும் எட்டமுடியாத நிலையில் உள்ளார். இதில் 3[?] சதங்களும், 69 அரைச் சதங்களும் அடங்கும்.

9 ஆயிரம் ரன்களை கடந்தவர்களில் இன்சமாம், கங்கூலி, ஜெயசூர்யா, அசாருதீன், அரவிந்த டி சில்வா ஆகியோர் உள்ளனர்.

இவர்களில் அசாருதீனும், டி சில்வாவும் தற்போது ஆடவில்லை. மற்ற மூன்று பேரில் இன்ஸமாம்தான் முதலில் டெண்டுல்கரைத் தொடர்ந்து 10 ஆயிரம் ஓட்டங்களை கடக்க உள்ளார். இதை அவர் நாளை மறுநாள் கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில் எப்படியும் அடித்துவிடுவார்.

நேற்று முன்தினம் கென்யாவுக்கு எதிரான ஆட்டத்தில்கங்கூலி 90 ஓட்டங்களை எடுத்தார். அவர் ஒரு ஓட்டம் எடுத்திருந்த போது அதிக ஓட்டங்கள் குவித்தவர்களின் பட்டியலில் 3 ஆவது இடத்திலிருந்த இலங்கை வீரர் ஜெயசூர்யாவை முந்தினார். தற்போது கங்கூலி 260 போட்டிகளில் ஆடி 9789 ரன்கள் எடுத்துள்ளார்.

அவர் ஐ.சி.சி கிரிக்கெட் தொடரில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடப்பது என்பது கடினம். இந்தவருட இறுதியில் தென்னாபிரிக்க அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடுகிறது.

அப்போது கங்கூலி சாதனை புரிய வாய்ப்புள்ளது.











**கண்ணீர் அஞ்சலி**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகிய **திரு. ஆறுமுகம் சந்திரமோகன் (அருள்தாஸ்)** அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர் பணிப்பாளர் சபை ஊழியர்கள்,
நிறுவன ஊழியர்கள்,
வடகடல் நிறுவனம், குருநகர், யாழ்ப்பாணம்.

(சி-3088)

**அன்னை நாகா புட்சிட்டியில் (10.09.2004)**
**5.சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோர் விபரம்**
**Annai Nagaa Food City**

| இல No | பரிசு Prize Range | பரிசின் விபரம் Prize Item | வாடிக்கையாளர் பெயர் Customer Name | வாடிக்கையாளர் விலாசம் Address |
|---|---|---|---|---|
| 01 | முதலாம் பரிசு | (Oven) வெதுப்பி | திரு.R.ராஜு | 45.செட்டி ஒழுங்கை, செட்டித்தெரு, நல்லூர். |
| 02 | இரண்டாம் பரிசு | C.D. பிளேயர் | திருமதி.S.சரவணபவானந்தர் | இல-20.மாதிரி கிராமம், யாழ்ப்பாணம். |
| 03 | மூன்றாம் பரிசு | காஸ் அடுப்பு | திரு.S.சிவகுமார் | 12/A, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். |
| 04 | நான்காம் பரிசு | அரைக்கும் இயந்திரம் | திர.N.ஜெயசீலன் | உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| 05 | ஐந்தாம் பரிசு | மேசை மின் விசிறி | U.பிரமிலா | 18A, மூத்தவிநாயகர் கோயில், நல்லூர், யாழ்ப்பாணம். |
| 06 | ஆறாம் பரிசு | றைஸ் குக்கர் | M.சிவாஜினி | 90, ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய். |
| 07 | ஏழாம் பரிசு | ரேடியோ கசட் | திருமதி.G.ராஜரட்ணம் | 418, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| 08 | எட்டாம் பரிசு | டோஸ்டர் | திரு.சிங்கராஜா குமரன் | 19, சுப்பிரமணியம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். |
| 09 | ஒன்பதாம் பரிசு | மின் அழுத்தி | திரு.A.R.குணராஜா | அமுதகம், பிரதான வீதி, மந்திகை. |
| 10 | பத்தாம் பரிசு | கேத்தல் | R.சோபிகா | 73, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். |

**இன்றே நீங்களும் அன்னை நாகா புட்சிட்டியில் பொருட்களை கொள்வனவு செய்து அடுத்துவரும் சீட்டிழுப்பில் அதிஸ்டசாலியாகுங்கள்.**

Annai Nagaa Food City

அன்னை நாகா புட்சிட்டி,
175, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

T.P - 021-222 5515
T.P - 021-222 5223

# பெயர் வெளிவராத பட்டதாரிகளின் விபரங்களை திறைசேரி கோரியுள்ளது

அரச சேவையில் வேலையற்ற பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக ஒரு தொகுதிப் பட்டதாரிகளது பெயர்ப்பட்டியல் இரண்டு கட்டங்களாக கடந்த ஜூலை மாத இறுதியிலும், கடந்தமாத இறுதியிலும் நிதியமைச்சினால் வெளியிடப்பட்டிருந்தன.

தகைமையுடைய பட்டதாரிகள் எவரேனும் தமது பெயர்கள் வெளியிடப்பட்ட பட்டியல்களில் இடம்பெறவில்லை எனின், உடனடியாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

20.05.2004 இற்கு முன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள, அதேதினத்தில் 45 வயதுக்கு குறைந்த பட்டதாரிகளே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமது முழுப் பெயர், பிரதேச செயலர் பிரிவு, மாவட்டம், பிரதேச செயலகத்தினால் நேர்முகப் பரீட்சைக்காக வழங்கப்பட்ட இலக்கம், மேலதிக விபரங்கள் இருப்பின் அவற்றையும் குறிப்பிட்டு இந்தமாதம் 22 ஆம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களைப் பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், பொதுத் திறைசேரி, கொழும்பு - 01 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (31)

## பனை அபிவிருத்திச் சபை

# ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி; விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

வட-கிழக்குப் பகுதிகளில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பணிநிலைகளுக்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுளளன.

இரசாயனவியல் அல்லது விவசாயத்தில் விசேட பட்டதாரிகள் அல்லது உணவு தொழில்நுட்பவியல் பட்டதாரிகள் இந்தப் பணிநிலைக்கு விண்ணப்பிக்கமுடியும். ஆராய்ச்சித் துறைகளில் அனுபவம் பெற்றிருப்பது விசேட தகைமையாக எதிர்பார்க்கப்படுகிறது.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை இந்தமாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாக - பனை அபிவிருத்திச்சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர், இவை தொடர்பான மேலதிக விபரங்களை, பனை அபிவிருத்திச் சபை, 244 காலி வீதி, கொழும்பு -04 என்ற முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (31)

# சட்டவிரோத மின்பெற்ற ஆறுபேருக்கு அபராதம்!

சட்டவிரோத மின்சாரம்பெற்ற 6 பேருக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டது.

அல்வாய் பகுதியில் மின்சார சபை ஊழியர்களும், பொலிஸாரும் மேற்கொண்ட சோதனையின்போது இந்த ஆறுபேரும் கண்டுபிடிக்கப்பட்டனர். இவர்கள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிவான் தலா இருபதினாயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

இலங்கை மின்சாரசபை பருத்தித்துறை கிளையின முகாமையாளர் எஸ்.செல்வச்சந்திரன் தலைமையிலான குழு - நெல்லியடி பொலிஸ் நிலைய அதிகாரி தலைமையிலான குழுவும் இணைந்து மேற்கொண்ட திடீர் சோதனையின்போதே இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர். (17)

# நவோதயா திட்டத்தின்கீழ் புதிய பாடசாலைகள் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் நவோதயா திட்டத்தின்கீழ் மாவட்டத்துக்கு ஒன்று என்ற அடிப்படையில், ஒன்று தொடககம் ஐந்து வரையான வகுப்புக்களைக்கொண்ட வகை III ஐச் சேர்நத பாடசாலைகள் 25 புதிதாக உள்ளடக்கப்படவுள்ளன.

நகரப்பகுதிகளிலுள்ள பிரதான பாடசாலைகளில் தரம் 01 அனுமதிக்காக ஏற்படும் போட்டித்தன்மைகளைக் குறைப்பதற்காக, நகருக்கு அண்மித்ததாக உள்ள தரம் 1 தொடக்கம் ஐந்து வரையான வகுப்புக்களை மட்டுமே கொண்டுள்ள வகை III பாடசாலைகளே இந்தத் திட்டத்துக்காகத் தெரிவுசெய்யப்படவுள்ளதாக அறியப்படுகிறது.

இதனடிப்படையில் வட - கிழக்குப் பகுதிகளில் இருந்து இந்தவகைப் பாடசாலைகள் 8 புதிதாக நவோதயா திட்டத்தின்கீழ் உள்ளடக்கப்படவிருப்பதுடன், ஏற்கனவே உள்ளடக்கப்பட்டுவிட்ட தேசிய பாடசாலைகள் இந்தத் திட்டத்திலிருந்து நீக்கப்படவுள்ளன.

இலங்கைத் தீவு முழுவதிலும் நவோதயா திட்டத்தின்கீழ் 397 பாடசாலைகள் உள்ளீர்க்கப்பட்டிருந்தன. இவற்றுள் 25 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக உள்ளன. தேசிய பாடசாலைகளை நவோதயா திட்டத்திலிருந்து நீக்கி, அவற்றுக்குப் பதிலாகவே புதிதாக 25 பாடசாலைகள் இணைக்கப்படவுள்ளன.

தேசிய பாடசாலைகளை இந்தத் திட்டத்திலிருந்த நீக்கும்போது வட-கிழக்குப் பகுதிகளில் இருந்து ஆறு பாடசாலைகள் நீக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (31)

### நிர்வாகசேவை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவையில் ஆட்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. (72)

### புலோலியில் தண்ணீர் பந்தல்

(வடமராட்சி)

வல்லிபுர ஆழ்வார் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு புலோலி ஆனைவிழுந்தான் சந்தியில் நடைபெறும் இளைஞர் தண்ணீப் பந்தல் இந்தமுறையும் மிகச் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

40 ஆண்டுகாலமாக இளைஞர்களால் நடாத்தப்பட்டுவரும் இந்த தண்ணீப் பந்தலுக்கு இந்தமுறை நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

### கடற்தொழில் உபகரணங்கள் அன்பளிப்பு

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களது தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக 'மூவி மொனடே' எனும் அமைப்பினால் கடற தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இந்த அமைப்பு பருத்தித்துறை இன்பருட்டி, கற்கோவளம், உள்ளிட்ட வடமராட்சி மீனவர்களுக்கு வழங்குவதற்கு, கடற்தொழில் வலைகளையும் கட்டுமரங்களையும் வழங்கியுள்ளது. கடந்த கால யுத்த அழிவுகளால் பெரும்பாலான கடற்தொழில் உபகரணங்கள் அழிவுற்றமை குறிப்பிடத்தக்கது. (14)

### விழிப்புணர்வு கண்காட்சி

(வடமராட்சி)

வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் பெற்றோர் விழிப்புணர்வுச் செயலமர்வும், கண்காட்சியும் வடமராட்சி கிழக்கு குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் நடத்தப்பட்டது.

இந்தக் கண்காட்சியிலும், செயலமர்விலும் மருதங்கேணிக் கோட்டத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மிக ஆர்வத்துடன் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாகாணக் கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன. (14)

### முகாமைத்துவ போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான முகாமைத்துவப் போட்டிகள் இன்றுமுதல் எதிர்வரும் 18 ஆம் திகதிவரை நடத்தப்படவிருப்பதால், இந்தப்போட்டிக்குத் தயார் நிலையில் இருக்குமாறும், மாகாணமட்ட நடுவர் தீர்ப்புக்கு ஒத்துழைக்குமாறும் சகல உள்ளூராட்சி மன்றங்களையும், யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (29)

# உடுத்துறை வித்தியாலயத்துக்கு கணினி தொகுதிகள் அன்பளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மகா வித்தியாலயத்துக்கு வெளிநாட்டில் இயங்கிவரும் தமிழ் மாணவர் அமைப்பின் உதவியுடனும், வடமராட்சி கிழக்கைச்சேர்ந்த புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசிப்போரின் நிதியுதவியுடனும் 10 கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இந்த வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடமராட்சிப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அருளானந்தம், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி இரகுநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (14)

# தாளையடியில் காணாமற்போன கணினிகள் கிளிநொச்சியில் மீட்பு

(கிளிநொச்சி)

தாளையடிப் பிரதேசததில் காணாமற்போன இரு கணினிகள் கிளிநொசசியில் மீட்கப்பட்டன.

கடந்த 7 ஆம் திகதி தாளையடி பிரதேசத்தில் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் வேலைத்திட்டத்துக்காக பயன்படுத்தப்பட்டுவிட்டு வைத்திருந்த இரண்டு கணினிகளும் அதற்குரிய பாகங்களும் இரவுவேளை திருடப்பட்டது. இந்தக் கணிணிகளையும் கிளிநொச்சி ஊடாக கொண்டு செல்லமுற்பட்டபோது குற்றத்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டடிருந்த காவல்துறையினர் ஏ-9 வீதியால் பயணித்த நபரைச் சந்தேகத்தின் பெயரில் சோதனையிட்டபோது, திருடப்பட்ட பொருட்களுடன் அவர் கைது செய்யப்பட்டார் காவல்துறையினரின் விசாரணையின் பின்னர் இவர் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார். (17)

# வலயமட்ட விவசாய அறிவுப் போட்டிகள்!

(யாழ்ப்பாணம்)

வலயமட்ட விவசாய அறிவுப் போடடிகள் ஒக்ரோபர் 02 ஆம் திகதி யாழ். நல்லூர், கோப்பாய்க் கோட்டங்களில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை மட்டத்தில் தரம் 10, 11 மாணவர்களிடையே போட்டியை நடாத்தி தெரிவுசெய்யப்படும் ஐந்து மாணவர்களது பெயர் விபரங்களை- பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி, யாழ்.கல்வி வலயம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளனர்.

யாழ்.நல்லூர் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான போட்டி யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும், கோப்பாய்க் கோட்ட மாணவர்கள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் ஒக்ரோபர் 2 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும், போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகளின் விவசாய ஆசிரியர்களையும் போட்டி நடைபெறும் இடங்களுக்கு வருமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (91)



நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற சைவப்புலவர் பட்டமளிப்பு விழாவில் முன்னாள் கலைப்பீடாதிபதி ப. கோபாலகிருஷ்ண ஐயரிடம் சைவ புலவர் ஒருவர் பட்டம் பெறுவதைப் படத்தில் காணலாம். (91)

# படகுச்சேவை நடைமுறை குறித்து அரசியற்துறை கலந்துரையாடல்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகாட்டுவான் பயணிகள் படகில் பயணிப்போர் ஒழுங்கு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்படும் படகு உரிமையாளர்களுக்கு அண்மையில் நெடுந்தீவு அரசியற்துறைப் பணிமனையில் இடம்பெற்றது.

படகில் பயணிக்கும்போது பயணிகள் எவரும் மதுபானம் அருந்துதல், வெற்றிலை போடுதல், புகைப்பிடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுக்கவும், படகின் பின்பகுதியில் பெண்களும், ஏனைய பகுதியில் ஆண்களும் இருந்து பயணிக்கவும், பாதுகாப்பற்ற பகுதியில் இருந்து பயணிப்பதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், ஏனைய பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்தக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.ரங்கன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நெ.ப.நோ.கூ. சங்கம் தனியார் படகான அக்குவாட்டிக் ஆகியவற்றின் உரிமையாளர்களும், படகுப் பணியாளர்களும் கலந்துகொண்டனர். (113)



'ஏரோடியானின் சபதம்' நாட்டுக்கூத்தின் அண்ணாவியார் சைமன் யேசுதாசனை, கலாபூஷணம் செ. மெற்றாஸ்மெயில் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதைக் காணலாம். அருகிலே மிருதங்க கலைஞர் சி.நாகேந்திரம் காணப்படுகிறார். (113)



'ஏரோடியானின் சபதம்' நாட்டுக்கூத்திலே பங்கேற்ற கலைஞர்களைப் படத்தில் காணலாம். (113)







# பெரியய்யா



நெடுநேரமாய் பஸ் நிலையத்தில் காத்திருந்தான். பஸ் -வரவில்லை என்கிற கவலையை விட, பெரியயயா வீட்டில் - தான் எதிர்கொள்ளப்போகிற துயரம் பறறிய சங்கடம் பெரிதாயிருந்தது.

பெரியம்மா இப்போது தனியாகத்தான் இருப்பாள்.

பிள்ளைகள் கனடாவிலிருந்து வந்திருக்கக் கூடுமோ தெரியவில்லை. நீண்ட நாடகளாக அங்கிருந்து தகவல்கள் ஏதுமில்லை. பெரியம்மா காலமான பிறகு அக்கறையாய் தகவல் அனுப்ப எவரும் இருக்கவில்லை தான்.

பாரிசவாதம் கண்டு படுக்கையில் விழுந்துவிட்ட பிறகு, நியாயப்படி பக்கத்தி லிருந்து அவரைக் கவனித்திருக்க வேண்டிய ஒருவன் இப்படி இரண்டு வருடங்களுக்குப் பிறகு அங்கு செல்கிறேனே என, மனதில் உறுத்தலுக்கு உள்ளானான் இவன்.

பெரியய்யா பற்றிய நினைவுகள் கிளர்ந்ததில் மனதின் சோகம் மேலும் கனதியுற்றது.

பன்னிரண்டு வயதிலிருந்து பதினெட்டு வயது வரை பெரியய்யா வீட்டில் - யாழ்ப்பாணத்தில் தான் தங்கிப் படித்தான்.

விசுவமடுவில் தன் பெற்றோர், சகோதரிகளோடு வாழ்ந்திருந்தவனை - யாழ்ப்பாணம் கூட்டிவந்து, தன்னோடு வைத்துப் படிப்பித்து, தனது பிள்ளைகளோடு அவர்களிலொருவனாய் வளர்த்து, பன்னிரண்டாம் வகுப்புவரை படித்த ஒருவனாய் ஆக்கியவர் பெரியய்யாதான்.

அவர் குடும்பத்தில் எல்லோருமே இவன் மீது அன்பும், அக்கறையுமாயிருந்தார்கள்.

“... ராசா இஞ்ச வாடியப்பு” என வாஞ்சையாய்ப் பெரியய்யா அழைக்கையில், மனசு குளிரும் இவனுக்கு. தான் பிறந்த வீட்டில்கூட அப்படியொரு பிரியத்தை அவன் அனுபவித்ததில்லை. பெரியம்மா கூட அக்கறையும், கவனிப்புமாய் இவனையும் தன் பிள்ளை போலவே நடத்தினாள்.

இவன் படிக்க வந்து இரண்டொரு வருடங்களுக்குள் பெரியய்யாவின் மூத்தமகன் பரணீதரன் கனடா பயணமானான்.

இவனையொத்த வயதையுடைய பாமதிக்கும் கனடாவிலேயே சம்பந்தம் சரிவந்தபோது, அவளது உயர்தரப் படிப்பை நிறுத்தி, அவளையும் கனடாவுக்கு அனுப்பினார்கள்.

கடைசியில் பெரியய்யாவின் கடைசி மகன் வசீகரனும், இவனுமே அந்தக் குடும்பத்தில் பிள்ளைகளாயிருந்தார்கள்.

உடம்புக்கு முடியாத பெரியம்மாவுக்கு இவனே உதவியாகவும், துணையாகவுமிருந்தான்.

தயங்காமல் எந்த வேலையானாலும் முகம் சுழிக்காமல் செய்கிற இவன் மீது - அவர்களின் பாசம் அதிகரித்தது.

இந்த நிலையில்தான் யுத்தம் உக்கிரமடைந்து, யாழ்ப்பாண மக்கள் தென்மராட்சிக்கும் - வன்னிக்குமாய் இடம்பெயர நேர்ந்தது.

பெரியய்யா குடும்பத்தோடு இவனும் வன்னிக்குத் திரும்பினான்.

அண்ணன் குடும்பம் சிறிதும் சிரமப்படாமலிருக்க இவனுடைய தந்தையும் இவனுமாய் முடிந்தவரை ஒத்தாசை புரிந்தார்கள்.

இதற்குள் இவனது தந்தையும் நோயாளியாகி விட்டதால், இவன் தோட்டங்கள், வயல்களில் பாடுபடத் தொடங்கினான்.

நிலைமை சீராகிப் பெரியய்யா குடும்பம் ஊருக்குத் திரும்பியபோது, இவனைப் பிரிந்துபோக இவனது பெரியய்யா பெரிதும் சங்கடப்பட்டது இப்போதும் இவனது மனதில் துலக்கமாய்த் தெரிகிறது,

யாழ்ப்பாணம் திரும்பிய பெரியய்யா குடும்பத்தோடு, பெரியய்யா உடல் நலத்துடன் இருந்த காலம் வரை கடிதங்களூடாகவோ, நேரடித் தகவல்களூடாகவோ தொடர்பிருந்தது. திடீரென அது நின்று போயிற்று.

நீண்டகாலமாக எந்தத் தகவல்களும் இல்லையே எனக் குழம்பியிருந்தபோதுதான், பாரிசவாத நோயால் பெரியய்யா படுக்கையில் விழுந்துவிட்ட தகவல் இவனுக்குக் கிடைத்தது.

துரதிஷ்டவசமாக இவனால் உடனடியாகச் சென்று அவரைப் பார்க்க முடியாமற்போனது.

விறகு முறிக்கப்போன இவனது தகப்பனார் - மிதிவெடியில் அகப்பட்டுப் பாதத்தை இழந்துவிட, இவனே முழுக் குடும்பப்பாரத்தையும் சுமக்க வேண்டியவனானான்.

சில மாதங்களின் பிறகு அடுத்த பேரிடியாய் பெரியய்யாவின் மறைவுச் செய்தி கிட்டியது.

காலத்தின் திட்டமிட்ட சதியாய் நிகழ்ந்து விட்ட சமபவங்கள் அனைவரையும் உலுப்பின. இவனும் சமநிலை தளும்பித் தள்ளாடிப் போனான்.

நீண்டகாலமாய் யாழ்ப்பாணம் போகவேண்டும் என இவன் நெஞ்சடியிற் கிடந்த ஆசை - ஒரு முகூர்த்தம் வாய்த்த விதமாய் இப்போது கைகூடியிருந்தது இவனது தங்கையின் கணவர் குடும்பம் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களாய் இருக்க நேரிட்டதில், இவன் சாவகச்சேரி வரும் தேவை ஏற்பட்டது.

சாவகச்சேரியில் நிற்கிறபோதுதான், இவனது யாழ்ப்பாணம் போகும் ஆசை நிறைவேறியிருக்கிறது.

பஸ்வண்டி யாழ். நகர பஸ் நிலையத்தில் தரித்தபோது, நினைவின் தொடர் அறுபட - இவன் ஒரு அவசரத்தோடு இறங்கினான்.

பழைய ஞாபகங்கள் நின்று, மனதின் சங்கடம் மீண்டும் தலையெடுத்தது. பெரியம்மாவும், வசீகரனுமே வீட்டில் தனித்திருக்கக் கூடுமென எண்ணினான்.

பெரியய்யா இல்லாமல் அந்த வீட்டை இவனால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை.

கறுத்து நெடுத்த அவரது தோற்றமும், பரந்த முகத்தில் எப்போதும் பளிச்சென்றிருக்கிற சிரிப்பும் ... உருவத்துக்குச் சிறிதும் தொடர்பில்லாத மென்மையான ஆனால், கணீரென்றிருக்கிற குரலும் இப்போதும் இவன் மனசிலாடிய.

பெரியய்யாவின் இழப்பை பெரியம்மா எப்படித் தாங்கிக் கொண்டிருப்பாள்.

எப்போதுமே ஏதும் நோய்நொடி சொல்லிக் கொண்டிருக்கும் பெரியம்மாவை - லேசாகக் கேலி செய்தபடி, மிளகுரசமும், முடக்கொத்தான் கஞ்சியும் தானாகவே தயாரித்துத் தரும் அவரை இழந்தபோது பெரிதும் தவித்திருப்பாள்.

வசீகரன் தனது செல்ல அப்பாவின் துணையின்றி எப்படித் தூங்கியிருப்பான்.

ஆசைப்பட்டது எதுவானாலும், எப்படியாவது வாங்கித் தருகின்ற அவனது அன்பு அப்பாவின் இழப்பை அவன் எப்படி எதிர்கொண்டிருப்பான்.

இத்தனை காலம் தள்ளி இப்போது தன்னைக காண்கையில், பழைய நினைவுகள் கிளர்ந்தெழ துயருற்று வருந்துவார்களே என்றெல்லாம் இவன் குழப்பினான்.

பெரியய்யா வீட்டருகே மினி பஸ்ஸை மறித்து இறங்கிக் கொள்ள எண்ணியவன் - பெரிதும் மாறிப்போன அந்த இடத்தில், அந்த வீட்டை அடையாளம் காணமுடியாமல் தவித்தான்.

கடைசியில் சந்தைக்குப் போகும் வழியிலிருக்கிற வைரவர் கோவிலை அடையாளம் கண்டு இறங்கிக் கொண்டான். யுத்தத்தின் வடுக்கள் பெரிதும் மாறி, புது இடமாய் மாறிப்போன அந்த ஊரைப் பார்த்தபடி பெரியய்யா வீட்டுக்கு வந்தான்.

முன் முற்றத்தில் பெரிதாய்க் கிளைபரப்பி நின்ற பெரிய மாமரம் இப்போது இல்லை.

இடதுபுற வேலியோடு தண்டவம் போல் கொத்தாகப் பூக்கள் தொங்கும் அந்தக் கொண்டல் மரம் இப்போது இல்லை.

வீட்டின் வாசலுக்குச் செல்லும் இருகரையிலும் குரோட்டன்கள் - வகை வகையாய்ச் சடைத்து நின்றன.

சாடிகளில் விதவிதமாய் ரோஜாச் செடிகள்.

இவன் முன்பு இவர்களோடு இருந்த காலத்தில் ஒரு ரோஜாச் செடியை உருவாக்கப் பாமதி பாடாய்ப்பட்டதை இப்போது நினைவு கொண்டான்.

வாசலுக்குப் போய் அழைப்பு மணியை அழுத்தினான் பதிலேதுமில்லை.

மீண்டும் அழுத்தியபோது ஒரு சிறுவன் பளிச்சென சிவப்பாய், அழகாய் வெளியில் வந்து

“ஆரைத் தேடுறீங்க...” என்றான்.

பெரியம்மா ... பெரியம்மா...

இல்லையா என இவன் சிறிது தடுமாறுகையில் -

“மம்மீ ஆரோ வந்திருக்கிறாங்க.

பெரியம்மாவைக் கேக்கிறாங்க..”

என்று சொல்லியபடி உள்ளே ஓடினான்.

சிறிது நேரம் கழித்து செருப்புகள் ஒலியெழுப்ப மெல்ல மெல்ல நடந்து வந்த அந்த வயோதிபப் பெண்ணை அடையாளம் காண இவனுக்குச் சில கணங்கள் பிடித்தன.

நீங்கள் ஆர்? ஆரைத் தேடுகிறியள்...?

என மூக்குக் கண்ணாடியை உயர்த்தும் பெரியம்மாவிடம்

அது ... நான் பெரியம்மா... உங்கட மூர்த்தி விசுவமடு வைத்திலிங்கத்தின்ர மகன்.

எட எங்கட மூர்த்தியே... கடவுளே அடையாளம் தெரியாமல் மாறிப்போனாயடா வாவன் உள்ளுக்க...

பிள்ளை பாமதி இஞ்ச பார் ஆர் வந்திருக்கிற எண்டு...

என ஆச்சரியமாய்க் கூறியவள்..

எங்கட பாமதி போன மாசம் தான் கனடாவால வந்தவள். பிள்ளையளும் தாயுமாய் அவையள் தான் இப்ப என்னோட என்றபடி உள்ளே நடந்தாள்.

இவன் அவளைத் தொடர்ந்தான்.

என்றும் கண்டிராத ம்கிழ்ச்சியும், பூரிப்புமாய் இருக்கிற பெரியம்மா இவனை ஆச்சரியப்பட வைத்தாள்.

எப்பிடி மூத்தியண்ணை.. சுகமாயிருக்கிறியளோ என்றபடி வந்த பாமதியை அடையாளம் தெரியவில்லை.

ஒரு மூலையில் தொலைக்காட்சி இயங்கிக் கொண்டிருந்தது.

பெரியம்மா அதன் முன்னாலிருந்த கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

கூல்றிங் எடுத்துக் குடுபிள்ளை” என்றபடி தொலைக் காட்சியில் மூழ்கிப் போனாள் பெரியம்மா.

“குளிர்பானத்தோடு வந்த பாமதி,

“அம்மாவுக்கு நாள் முழுக்க இந்த ரீ.வி. சீரியல் தான் கதி. ஒண்டக்கூட மிஸ் பண்ணமாட்டாங்க” என்றாள்.

கட்டையாக வெட்டப்பட்ட முடியும், சாயமிட்ட உதடுமாய் இருக்கின்ற அவளை - ஒருகணம் கவனித்தபடி குளிர்பானத்தை எடுத்துக் கொண்டான்.

விளம்பர இடைவேளையொன்றில் பெரியம்மா மீண்டும் இவனோடு பேசினாள்.

இஞ்ச வேற என்ன வேலையத்தான் செய்யிறது? குசினி வேலைக்கு ஆள் இருக்கு. வெளிவேலை, தோட்ட வேலைக் குப் பெடியன் இருக்கு.

நான் பின்ன என்ன செய்ய ....

உந்த சீரியல்களோட தான் பொழுது போகுது. நெடுக இதைப் பாத்துப் பாத்து ஒருக்காலும் இதை ‘மிஸ்’ பண்ண மனம் கேக்குதில்ல.

இவன் ஏதும் பேசாமல் அமர்ந்திருந்தான்.

வீட்டில எல்லாரும் சுகமாய் இருக்கினமே.. உங்கட ஐயா பாடென்ன! நடந்து திரிவாரே..?

“ஓமோம்.

கைத்தடியோட ஒரு மாதிரி நடப்பார். கடும் வேலையொண்டும் பாக்க ஏலாது. நாங்களும் அவர வேலை செய்ய விடுகிறேல்ல. உங்களுக்குத் தெரியும் தானே. அவர் ஒரு நிமிசம் சும்மா இராத மனிசன்.

இப்ப நடக்காத, திரியாத எண்டு மறிக்கேலுமா...’ என்று நிறுத்தினான்.

பெரியம்மா மீண்டும் ரீ.வி சீரியலுக்குள் ஒன்றிப் போயிருந்தாள்.

யாருமே பெரியய்யா பற்றிப் பேச்செடுக்க மாட்டார்களா என்றிருந்தது.

அவரை மறந்தே போனார்களோ? என நினைத்துக் கொண்டான். நிலை கொள்ளாமல் எழுந்து கொண்டான்.

சுவரில் தொங்கும் படங்களிடையில் பெரியய்யாவின் படம் எங்காவது இருக்கிறதா என்று தேடினான்.

எங்குமே அது இல்லை. ஒருவேளை பூசை அறைக்குள் வைத்திருக்கக்கூடும் என எண்ணினான். உள்ளே பாமதி தனது பிள்ளைகளோடு ஏதோ பேசுவது கேட்டது.

அவளது சத்தத்தை அமுக்கியபடி

“இதுக்கு மேல ஏதாச்சுப் பேசினா மரியாதை கெட்டுப் போகும் ஆமா...” என்று யாரோ ஒரு பெண் தொலைக் காட்சியில் கத்தும் ஒலி உரமாகக் கேட்டது.

- ந. சத்தியபாலன்

# நூலகம்



நூலின் பெயர் : தரைமீன்கள் (சிறுகதைத் தொகுதி)
எழுதியவர் : ச.முருகானந்தன்
வெளியீடு : மல்லிகைபந்தல்
விலை : 150/-

எழுத்தாளர் ச.முருகானந்தனின் மீன்குஞ்சுகள் என்ற தொகுதியை அடுத்து வெளியாகியுள்ள புதிய தொகுதி - 'தரை மீன்கள்'. ச.முருகானந்தன் எழுதிய இருபது சிறுகதைகள் இந்தத் தொகுதியில் அடங்கி உள்ளன.

ஈழமக்களின் துயரமும், அவலமும் நம்பிக்கை உணர்வும் நிறைந்து - செறிந்த காலப்பகுதியை இந்தத் தொகுப்பில் உள்ள பல்வேறு கதைகளும், சித்திரம் போல எழுத்தில் பதிய வைத்துள்ளன. ச.முருகானந்தன் ஒரு மருத்துவர். யுத்த சூழலில் வன்னிப்பகுதியில் கடமையாற்றியவர். அன்றாட வாழ்வில் மக்கள்படும் துயரம் அவர்கள் அனுபவிக்கும் கொடுமைகள் இந்த அவலங்களை அவர்கள் நெஞ்சுரத்தோடும், தன்னம்பிக்கையோடும் எதிர்கொண்ட விதம் என்பன வாழ்வை உயிர்ப்போடும், உள்ளபடியும் எந்த மேற்பூச்சும் இன்றி முருகானந்தன் பதிவு செய்திருக்கின்றார்.

சமூகச் சூழல் என்பது மனிதனுடைய குணநலன்களைத் தீர்மானிக்கும் என்பது அசைக்கமுடியாத உண்மையாகும். முருகானந்தனுடைய இருபது கதைகளிலும் வருகின்ற மனிதர்களை - அபூர்வமானவர்களாகவும், நம்பமுடியாதவர்களாகவும் வாசகர்கள் காண முடியாமைக்கு முருகானந்தன் தன்னுடைய பாத்திரங்களை இயல்பாக படைத்துள்ளமையே காரணமாகும்.

முருகானந்தன் - பாத்திரவார்ப்பில் காட்டிய அக்கறையைவிட, கதை சொல்வதில் செலுத்திய ஆர்வமே மிகைபடக் காணப்படுகிறது. இதனால், மனதில் அழுத்தமாகப் பதியவேண்டிய பாத்திர வார்ப்புகளுக்குப் பதிலாக, கதையே மேலோங்கித் தெரிகிறது.

முருகானந்தன் நீண்டகாலமாக எழுதிவருபவர் என்பதும், அதிகமாக எழுதுகிறார் என்பதும் அவரை வெறும் கதை சொல்லியாக மாற்றும் தன்மை கொண்டதாக அமையாது என்பதை 'தரைமீன்கள்', 'புதைகுழி', 'மீட்பு' போன்ற கதைகள் அழுத்தமாக, சூழ்நிலையையும் - சம்பவத்தையும் பதிவு செய்திருக்கின்றது.

முருகானந் தனின் மனிதர்கள் - நமது சமகாலத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களாதலால், அவர்களின் பாத்திர வார்ப்பு இயல்புகள் நமக்கு பளிச்சென்று தெரிந்து விடுகின்றன.

அவர்களின் நடை, உடை, பாவனை, உரையாடல் என்பனவற்றை ஒரு படைப்பாளி ஆழ்ந்து கவனிக்கும் போதுதான் - நுட்பமாக உயிர்ப்புடன் பதிவு செய்ய முடியும்.

முருகானந்தன் - சமகால வாழ்வை எந்தவிதமான மெருகூட்டலும் இன்றி சொல்கிறார் என்பதுதான் அவரது சிறுகதைப் படைப்பின் தளமும், பலமும் ஆகும்.

இன்றைய படைப்பாளி தனது காலச்சூழலை நம்பிக்கையோடும், உறுதியோடும் பதிவுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளான்.

தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமும், கொடுமைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சூழ்நிலையில் அதற்கு எதிராகவும், மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் விதத்திலும், ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை ஆதரித்து முன்னெடுக்கும் விதத்திலும் எழுதுவதே இன்றைய படைப்பாளியின் கடமையாகும்.

இதை முருகானந்தன் அர்ப்பணிப்போடு செய்திருக்கின்றார் என்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

இன்றைய சிறுகதை - மொழி நடையிலும், தன்னுடைய வடிவத்திலும் புதிய போக்குகளை வெளிப்படுத்துகின்றது என்பது குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

மக்கள் வாழ்வை மனப்பூர்வமாகப் பதிவுசெய்யும் முருகானந்தன் - தன்னுடைய படைப்புத்திறனை தொகை என்பதைவிட, அதன் தரம் என்பதில் உறுதிப்படுத்துவது பற்றி கவனம் செலுத்துவது அவசியம். தன்னுடைய தொகுதியை மீண்டும் தட்டிப் பார்க்கின்றபோது அவரே இதை மனதார உணரமுடியும்.

தொகுதியின் கதைகளே தம்மைப்பற்றி பேசவேண்டும் என்பது இன்றைய படைப்புத்துறையின் அழுத்தமான கருத்தாகும். மாறாக தகுதி வாய்ந்த மதிப்பீட்டாளர்களால் சொல்லப்பட்ட கருத்துக்களை வாசகர்களே படிக்கும்படி கேட்பது பொருத்தமான ஒன்று அல்ல.

இந்தத் தொகுதியில் அந்தக் குறையை முருகானந்தன் தவிர்த்திருக்கலாம்.

தரைமீன்கள் அழகாக வெளியிடப்பட்டுள்ள சிறுகதைத் தொகுதி. முருகானந்தனின் இனிவரப்போகும் எழுத்துக்களை தீர்மானிக்கின்ற ஆற்றலும் இந்தத் தொகுதிக்குண்டு.

இந்தத் தொகுதியை மல்லிகைப் பந்தல் வெளியிட்டுள்ளது. அச்சாக்கப் பதிப்பு என்பன தரமாய் உள்ள இந்தத் தொகுதி - 150 ரூபாய் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது வியப்பைத் தருகிறது.

மலிவான நிலையில் அழகான நூல் ஒன்றை வாசகர்கள் வாங்குவது இன்றைய ஈழத்தமிழ் இலக்கியத்துக்கு வலுச்சேர்ப்பதாக அமையும்.

செ.யோகநாதன்

# மாற்றம்



காலம் புரள்கிறது.
நீ யாசகம் கேட்ட காலம் போய் இப்போது நான் யாசிக்க வேண்டி இருக்கிறது.
நீ செல்வந்தனானதும், நான் வறிஞனானதும் ஒரு சுழற்சிக்குள் நடந்து முடிந்துவிட்டது.
உனது கர்வம், அலட்சியத்தின் முன் நான் தலை குனிந்து நிற்கிறேன்.
ஒரு இரவு... விடிவதற்குள் நான் வறிஞனானேன். நீ செல்வந்தன் ஆனாய்.
இப்போது, உனது வாசலில் நான் இரந்தபடி நிற்கிறேன்.
உலகம் சுற்றிக்கொண்டேயிருக்கிறது.
உலகநியதி தனக்குத்தானே வகுத்த படி இயங்கிக்கொண்டிருக்கிறது.
மழையின் கடுமை உனக்கும் எனக்கும் தெரிந்ததில்லை.
நாம் மழையை சந்தோஷமாய்த்தான் பார்த்திருக்கிறோம்.
இதுவரைக்கும் எங்கேனும் மழை அழித்த கிராமங்களைப் போய்ப்பார்.
அப்போது மழையின் கொடூரம் புரியக்கூடும்...
அளவு மீறிப்பெய்கின்ற மழை அழித்து விடுகின்றது எல்லாவற்றையும்...
நீயும் அப்படித்தான், எல்லையின்றிய உன் வார்த்தைகளை இறைக்கின்றாய்.
ஒரு மழையின் சந்தோஷமென நினைக்கின்றாய் அவற்றை...
மழைத்துளிகளாய் உன் வார்த்தைகளை விசிறும்போதே நீ உனக்குள் ரசித்துச் சிலிர்க்கிறாய்... இங்கே ஒரு மலர்வனம் வெள்ளத்தில் அமிழ்ந்து கொண்டிருப்பதை அறியாமல்...
ஆனால் மழையின் கொடுமையை நானும் அறியாமல்தானிருந்தேன்...
உன் வார்த்தைகளைக் கேட்காத வரைக்கும்...!
மழை ஓய்ந்த பிறகும் துன்பம் தருமே வெள்ளம்...
நீ ஏன் அளவு மீறிய மழையானாய்...?
வாசலில் ஒருவன் நிற்பதுகூடத் தெரியாமல் நீ உன்பாட்டில் பாடிக்கொண்டிருக்கிறாய்...!
நீ யாசித்தபோதும் சில பாடல்களைப் பாடினாய்! அவை என் மனதை அசைத்தன. இப்போது பாடுகிறாய்!
அந்தப் பாடல்கள் என் செவிகளில் நெருப்பை ஊற்றுகின்றன.
நான் திரும்பி நடக்கிறேன்!
காத்திருந்து, காத்திருந்து வலித்த கால்கள் திசையறியாமல் நடக்கின்றன.
அயலிலே உன்னைப்போல இன்னும் எத்தனையோ செல்வந்தர்களின் வீடுகள். ஒரு வீட்டின் முன்புகூட நிற்கத் தோன்றவில்லை...
நீயே உன் கதவைத் 'தாழ்' போட்ட பிற, எந்தக் கதவைத் தான் நம்பிக்கையோடு தட்டமுடியும்...?
அத்தோடு, என்னுடைய எந்தப் பொருளும் அவர்களிடம் இல்லையே நான் உரிமையோடு கேட்பதற்கு...?
களைத்துப் போன கால்கள்...
நிலத்தில் சரிகிறேன்!
நிலவு வானுக்கு வருகிறது!
இந்த நிலவு எத்தனை அழகாயிருந்தது அப்போது...!
இப்போது, உனக்கும் அது அழகாயிருக்கக்கூடும்!
எனக்கு அழகாயில்லை...
அது ஒரு நாளைக்குத் தேயப்போகிறது எனும் உணர்வே வருத்துகிறது!
தேய்வை உணராமல் சிரிக்கும் நிலவு!
ஒரு நாளில் தன் அழிவை உணராது சிரிக்கும் மனிதம்!
நாளை இந்த உலகம் மறுபடி புரளக் கூடும்...!
காலம் தன் மாற்றங்களை மறுபடி, மறுபடி திருப்பக்கூடும்!
ஒரு கணம் போதும்! எல்லாமே மாறிப போவதற்கு...
எல்லாமே சிதறிப்போவதற்கு...
எனினும்... அப்போது நீ என்னிடம் யாசிக்கும் நிலை வரவேண்டாம்... உன் பாடல் என் மனதை அசைக்கவேண்டாம்...
இரத்தலின் துயரைப் பரிபூரணமாய் உணர்ந்ததால் சொல்கிறேன்.
இனியொரு பொழுதில் யாசிப்பின் நிழல்கூட உன்னைத் தொடவேண்டாம்...
ஒரு பொழுது... ஒரு கணம் போதும்... எல்லாமே மாறிப்போவதற்கு!

- தாட்சாயணி

# தாஜ்மஹால்

காதலனின் கனிவு கொண்ட கதையால்
கிறங்கிப் போனாள் காதலியும்
காதலன் கொண்ட பாசமதில் உருகிபோனாள்
பனிக்கட்டியாகப் பாவையும்
பாச வலை வீசியவன் மீண்டும் பரிவாய்
பல பாசரங்களை பரவவிட்டான்...
பால் போன்ற வதனமுள்ள பண்புள்ள
பாச நாயகியே...!
பாரினிலே உன்னழகிற்கு யாருளர்
பகருவாய்...!
பாசமுடன் நான் கொண்ட காதலுக்காய்
பக்கத்தில் கட்டுவேன் தாஜ்மஹால்
பாசமுடன் உன் அப்பன் தரு பணரொக்கத்தில்
பாங்காகக் கட்டுவேன் சொர்க்கத்தை...!

- பொன்.சுகந்தன் -

# மனவருத்தமாக இருக்கிறது

யாழ்ப்பாண மண்ணைவிட்டு இடம்பெயர்ந்து வெளிநாடு போனதுதான். பாதை திறந்தும் இங்கே வர மனமில்லாமல் இருந்த மதியிடம் - யாழ்ப்பாண நிலைமையை, இங்கே வந்து போனவர்கள் சொன்னார்கள். அதன் பின்தான் மதியும் இங்கே வருவதற்கு ஆயத்தமானான்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் மதியின் நண்பர்- அறிவிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு இங்கே வருவதாகச் சொன்றான்.

அறிவும் வான் ஒன்றைப் பிடித்துக்கொண்டு, மதி வரும் நாளில் இருந்து இரண்டுநாள் முன்னரே கொழும்புக்குச் சென்றான். அங்கிருந்து அவன் வரும் நேரம் பார்த்து, கட்டுநாயக்க விமானநிலையத்துக்குச் சென்றான். வந்திறங்கியதும் மதியைக் கூட்டிக்கொண்டு, வானில் ஏற்றிக் கொண்டு வந்தான்.

மதி அமைதியாக இருந்தான். ஏன்டா! ஏதாவது கதையண்டா. இல்ல கட்டுநாயக்க விமானநிலையம் தாக்கப் பட்டதுதானே. ஓ... அதற்கென்ன. இந்த இடத்தில் அடி விழுந்திருக்கின்றது. என்பதை நினைக்கும்போது வியப்பாக இருக்கின்றது என்று சொல்லி, விரிந்த பார்வையில் அறிவைப் பார்த்தான்.

கொழும்பில் நிற்க விருப்பமில்லாமல் மதியை அன்றே யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிவந்தான் அறிவு. இருவரும் வந்து கொண்டிருந்தனர்.

ஓமந்தை வந்ததும் ஆமியைப் பார்த்து மிரண்டுபோய் நின்றான். என்னடா இப்படி ஆமிக்காரன்கள் நிற்கிறாங்கள். இங்கே செக் பண்ணுவாங்கள் என்று அறிவு சொன்னான்.

செக்கிங் முடிந்ததும் நகர்ந்தார்கள். புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதி வழியே முகமாலைவரை எந்தவித பயமுமில்லாமல் சந்தோஷமாக வந்தனர். முகமாலையில் செக்கிங் முடிந்ததும், மீண்டும் நகர்ந்தது வான்.

வழி நெடுக இராணுவம் இருமருங்கிலும் நிற்க, பெரியவர்கள் வருகின்றார்கள் - பாதுகாப்பு கொடுப்பது போல அரண் அமைத்து நிற்கின்றார்கள்.

ஒருவாறு பார்த்துக்கொண்டு வீட்டுக்குவந்து சேர்ந்ததும், மதி சொன்னான். இங்கே பார்த்தால் யாழ்ப்பாணம் வழி நெடுக ஆமி ஆயுதங்களுடன் நிற்கிறாங்கள். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஒருவரையும் ஆயுதத்துடன் காணமுடியவில்லை.

முகமாலையிலும், ஓமந்தையிலும் படையினர் குவிந்து ஆயுதத்துடன் போருக்குத் தயார் நிலையில் நிற்கும் ஆமிக்கு எதிரில் - புலிகளும் ஆயுதங்களுடன்தான் நிற்கவேண்டும். ஆனால், புலிகளின் படை அங்கே இல்லை. இதில் இருந்து




ஒன்று மட்டும் தெரிகின்றது.

ஆமி போருக்குத் தயார் நிலையில் நிற்கின்றாங்கள். அதேவேளை, கூடுதலான பயத்தில் இராணுவம் நிற்பதால் தான் இந்த வேசம்.

செய்திகளைக் கேட்ட எனக்கு, நேரில் வந்து பார்க்கின்றபோது ஒன்றுமட்டும் தெரிகின்றது. இனிமேல் தமிழனை ஒன்றுமே செய்யமுடியாது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருகின்றபோது, செக்கிங் செய்யுமட்டும் கூடுதலாகத் திட்டியும், புறுபுறுத்தும், சண்டை போட்டும் நிமிர்ந்து வருகின்றார்கள்.

இராணுவப் பகுதியில் தலையை ஆட்டி, அவங்களின் முகத்தைப் பார்த்து சிரித்து, பயந்து அவங்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டு நகரப் பழகிக் கொண்டார்கள்.

தங்களுடைய பகுதிக்கு வருகின்றபோது, புலிகள் செக்கிங் செய்கின்றபோது சலிப்பார்கள்.

வேறு இடத்தவன் எங்கள் பகுதிக்குள் இருந்து செக்கிங் செய்யும்போது எதுவும் பேசாமல் வருகின்றவர்களைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கின்றது என்று மனவருத்தத்துடன் சொன்னான்.

-செல்வா-

# பாண்டியன்குளம் பிரதேச மாதாந்த வீரமுரசு நிகழ்வு

முல்லைத்தீவு மாவட்டம் பாண்டியன்குளப் பிரதேச மாதாந்த வீரமுரசு நிகழ்வு - பாண்டியன்குளம் கோட்ட தேசிய எழுச்சி பேரவையில், செயலாளர் சி.சண்முகலிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருவப்படத்துக்கு தேசிய எழுச்சிப் பேரவை உபசெயலாளர் ஈகைச்சுடரை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் தனிநாயகம், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சே.முகுந்தன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் வேதநாயகம், உபசெயலாளர் பரமானந்தம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

**முல்லைத்தீவு மாவட்ட**

# அரச அதிபர் தலைமையில் விவசாயிகள் கலந்துரையாடல்

(மல்லாவி)

வவுனிக்குளம் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளோருக்கான, கலந்துரையாடல் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வு பாலி நகர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வவுனிக்குளம், பனங்காமம்குளம், கொல்லவிளான்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பங்குபற்றுவார்கள் என்று துணுக்காய் பாண்டியன்குளப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் அமலன் தெரிவித்தார்.

# துணுக்காய் பிரதேசத்தின் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச மாதாந்த வீரமுரசு எழுச்சி நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

துணுக்காய் கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள்குளம் ஆலயமுன்றலில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நேற்று இரவு 7.30 மணியளவில் கிராம அலுவலர் இராசரத்தினம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைக்க, தொடர்ந்து மாவீரர் ரங்கனின் திருவுருப்படத்துக்கு மாவீரர் சாலினியின் தந்தையார் ஈகைச்சுடரை ஏற்றி மலர் மாலை அணிவித்தார்.

எல்லைப்படை மாவீரர் இலக்கியனின் திருவுருவப்படத்துக்கு அவரின் துணைவியார் சுடரை ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வில் மல்லாவி புலிகளின்குரல் வானொலி மன்றத்தினரின் பட்டிமன்றம், இளம்தென்றல் குழுவினரின் இசை நிகழ்ச்சி உள்ளிட்ட பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

**வைகைநதி**

# மகளிர் கொத்தணி அமைப்பின் முதலாமாண்டு நிறைவு விழா

(அக்கராயன்)

வைகைநதி மகளிர் கொத்தணி அமைப்பின் ஓராண்டு நிறைவு விழா, அக்கராயன் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கடந்த புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, மகளிர் கொத்தணி அமைப்பின் தலைவி பிரான்ஸிஸ் சேவியர் சிவகௌரி தலைமையில் ஆரம்பமானது. தமிழீழ தேசியக் கொடியை ஆனைவிழுந்தான் வன்னேரி வலய அரசியற்துறைப் பொறுப்பாளர் எழில்குமரன் ஏற்றிவைக்க, மங்கள விளக்கை சிறுவர் நல உத்தியோகத்தர் ரட்ணவேல் ஏற்றி வைத்தார்.

வைகைநதி மகளிர் கொத்தணி அமைப்புக் கொடியை உந்துநர் செரீன் ஏற்றிவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மகளிர் மேம்பாட்டின் அவசியமும், மகளிரின் செயற்பாடுகளும் கிராம முன்னேற்றத்தில் மகளிரின் பங்கு எவ்வகையில் அமைந்திருத்தல் வேண்டும் என்பது குறித்தும் ரட்ணவேல் சிறப்புரையில் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகளும் உரையாற்றினர். இந்த நிகழ்வானது மெதடிஸ் திருச்சபையின் போதகர் மறைதாசனின் ஆசியுரையுடன் நிறைவு பெற்றது.

# கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மீது முகமாலையில் படையினர் கெடுபிடி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களை, முகமாலைச் சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தும் படையினர்-கடுமையான சோதனைக்குட்படுத்தி வருவதாக ஊழியர்கள் விசனம் தெரிவித்தனர்.

கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது வன்னி பெருநிலப்பரப்பில் பல்வேறு பகுதிகளிலும் புதைக்கப்பட்ட மிதிவெடிகள் மற்றும் பொறிவெடிகள் அகற்றும் நடவடிக்கையில், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிறுவனங்களில் கடமையாற்றும் யாழ்.குடாநாட்டு ஊழியர்கள் முகமாலைச் சோதனைச் சாவடி ஊடாக செல்லும்போதே, படையினர் இவர்களைக் கடுமையாக விசாரணைக்குட்படுத்துவதுடன், அடையாள அட்டைகளை துருவித் துருவி ஆராய்ந்து வருகின்றனர்.

இதேவேளை புலனாய்வுப் பிரிவினரும் இவர்களிடம் தகவல்களை அறிவதற்காக நீண்ட நேரம் தடுத்து நிறுத்தி, விசாரணையை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.




### கிராமிய அபிவிருத்தி வங்கி கிளை திறப்பு

(மன்னார்)

மன்னார்அடம்பன் பகுதியில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் அடம்பன் பிரதேசத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி 11 மணிக்கு இவ்வங்கிக் கிளை திறந்து வைக்கப்படவுள்ளது.

### பிரதேச செயலர் தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பூநகரிப் பிரதேசத்துக்கான புதிய பிரதேச செயலரான சிறிஸ்கந்தகுமார் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி பதவிக்கு தெரிவான இவர் கடந்த எட்டாம் திகதி பதவியேற்றார்.

# தனியாருக்குச் சொந்தமான கார் செயற்பாட்டை இழந்ததால் இருவர்காயம்

புதுக்குடியிருப்பில் இருந்து மல்லாவி நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் ஒன்று திடீரென வீதியை விட்டு விலகி அருகிலுள்ள கட்டடம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாது.

கரடிப்போக்கு பகுதியில் பசுமை கட்டடத்துக்குள் இந்த கார் புகுந்ததால், காரின் முன்பக்கம் சேதத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான காரில் பயணம் செய்தவர்களான நடராசா புவனேஸ்வரி (67 வயது), இவரது மருமகளான சிங்கநாயகம் சாந்தி (6வயது) என்பவரும், தலையில் சிறுகாயங்களுக்குள்ளாகி கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# போதிய ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் பெரிதும் பாதிப்பு

(வன்னேரி)

வன்னேரிக்குளப் பிரதேசத்தில், ஆனைவிழுந்தான் கிராமங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் கல்வி நிலையில் பின்னடைவுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

வன்னேரி - ஆனைவிழுந்தான் பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளுக்கான போதியளவு ஆசிரியர்கள் இன்மையால், மாணவர்களின் கல்விநிலை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

பாடசாலைக் கற்றலில் ஏற்பட்டுள்ள இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்கான தனியார் கல்வி நிலையங்களும் அங்கு இல்லை. இதனால் மாணவர்களின் கல்வி மேம்பாடு பெரிதும் பின்தங்கிச் செல்வதாகவும், கல்வி மேம்பாட்டுக்கு மக்களின் ஒத்துழைப்பு என்பது அசமந்த நிலையில் உள்ளதாகவும், நலன்விரும்பிகள் தெரிவித்தனர்.

# வெளிநாட்டு வைத்திய நிபுணரால் நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை

அளம்பில் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட தியாகதீபம் திலீபன் மருத்துவமனையில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்திருந்த வைத்தியகலாநிதி பொன்னம்பலம் கந்தசாமி - நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தார்.

தற்போது லண்டனில் வசித்து வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான இவர் - தனது சேவையை இந்த மருத்துவமனையின் ஊடாக மக்களுக்கு ஆற்ற வேண்டும் என்றே இங்கு வந்துள்ளார்.

இந்த சிகிச்சை குறித்து அவர் தெரிவிக்கையில்-

குறைந்த அளவு வசதியுடன் உணர்வு பூர்வமான சேவையை திலீபன் மருத்துவமனை மேற்கொண்டு வருவதால், இதன் மூலம் சிகிச்சை அளிப்பது இலகுவாக இருந்ததென்றும், நவீனவைத்திய வசதிகள் இல்லாத போதும், அறிவுபூர்வமாக செயற்படுவதைப் பார்க்க மகிழ்ச்சியாக இருக்கின்றதென்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மருத்துவமனையில் 122 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர் எனவும், கற்சிலைமடு தியாகதீபம் திலீபன் மருத்துவமனை, பூநகரி திலீபன் மருத்துவமனை, மாங்குளம் திலீபன் மருத்துவமனை போன்ற இடங்களில் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அடுத்தவாரம் முதல் கட்டமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

# வலைகளின் இழப்பீட்டை பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட மீனவர்கள் கோரிக்கை

பூநகரி - குருநகர் மீனவர்கள் கடந்த 2ஆம் திகதி ஒப்புக் கொண்ட நடைமுறைகளுக்கு மாறாக, பூநகரி மண்டைக்கல்லாறு கரைக்கு அரை கிலோமீற்றருக்கு அண்மையாக குருநகர் மீனவர்கள் மேற்கொண்ட இழுவை மீன்பிடியில் பூநகரியைச் சேர்ந்த 9 மீனவர்கள் 49 ஆயிரத்துத் தொள்ளாயிரம் ரூபா பெறுமதியான வலைகள் அழிக்கப்பட்டன.

கடந்த 2 ஆம் திகதி மீனவர்களுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்படி, பூநகரி கரையிலிருந்து 2 கிலோமீற்றருக்கு அப்பால் - வாரத்தில் 2 நாட்கள் இழுவை மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவரென உடன்பாடு செய்யப்பட்டது.

ஆனால் அந்த உடன்பாட்டை மீறி கரைக்கு அண்மையாக இழுவைத் தொழில் மேற்கொள்ளப்பட்டு, பூநகரி மீனவர்களின் வலைகள் அறுக்கப்பட்டுள்ளன. இதற்கான இழப்பீட்டை உடனடியாகப் பெற்றுத் தரவேண்டும் என, பாதிக்கப்பட்ட மீனவத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## காணிதொடர்பான கலந்துரையாடல்

வவுனியா மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள காணிகள் தொடர்பான பிரச்சினைகளை ஆராயும் கூட்டம் ஒன்று - இன்று மாலை 3 மணிக்கு வவுனியா அரச செயலகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாக வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினர், நிர்வாகத்துறை, உள்ளூர் திணைக்கள உயர்அதிகாரிகள், சட்டத்தரணிகள் சங்கம், வவுனியா நகரை அண்டிய விவசாய அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இந்த கலந்துரையாடல் இடம்பெறுவதுடன், இன்றைய பிரச்சினைகள் தொடர்பாகவும், தீர்வு காண்பது பற்றியும் ஆராயப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புனரமைப்பு

வன்னேரிக்குளம் பிரதேசத்தில் திக்காய் கிராமத்தில் பொது மண்டபங்கள், உள்வீதிகள், குளங்கள், பொதுக் கிணறுகள் என்பன நியாப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் குளங்கள் புனரமைப்பின் மூலம் கிராம மக்களின் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்க முடியும் என, அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். இதற்கான புனரமைப்பு வேலைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### தீக்காயத்தில் ஒருவர் மரணம்

வட்டக்கச்சி பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தீக்காயங்களுக்குள்ளாகி, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பயனளிக்காமல் மரணமானார்.

இந்தச் சம்பவம் அண்மையில் வட்டக்கச்சி சிவிக் சென்ரரில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் சிவகுமார் வ்யது (25) என்பவரே மரணமானவராவர்.

### பேச்சுப்போட்டி

அண்மையில் சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான பேச்சுப் போட்டி கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் இயங்கிவரும் சிறுவர் இல்லங்களின் சிறார்கள் பங்கு கொண்ட இந்தப் போட்டி கிளிநொச்சி கருணா நிலையத்தில் இடம்பெற்றது. சிறுவர் இல்ல சிறுவர்களிடையே வலைப்பந்து, கிரிக்கெட் போன்ற போட்டிகளும் இடம்பெற்றன.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

செறிவுஅறிந்து சீர்மை பயக்கும் அறிவுஅறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின்

திருக்குறள்

# நமது நோக்கு

## அதிகாரிகள் ஒத்துழைப்பது அவசியம்

யுத்த காலத்தில் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பணியாற்றிய ஊடகவியலாளர்கள் மீது எத்தகைய கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் இருந்தனவோ அதேபோன்ற நெருக்கடியான சூழல் இன்றும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

அண்மையில் மட்டக்களப்பில் வைத்து ஊடக வியலாளர் ஜீ.நடேசன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் - ஊடகவியலாளர் மீதான அச்சுறுத்தல்கள் இன்னும் குறையவில்லை என்பதையே எடுத்துக் காட்டியது.

யாழ்.குடாநாட்டிலும் சமாதானம் நிலவும் - புரிந் துணர்வு உடன்பாட்டுக்குப் பிற்பட்ட காலத்தில் பல்வேறு சம்பவங்களிலும் ஊடகவியலாளர்கள் தாக் கப்பட்டதுடன், அவர்களுக்குள்ள செய்தி சேகரிக் கும் உரிமைகளும் மீறப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் நாட்டில் நடக்கும் சம்பவங்களை அறிந்துகொள்வதற்கு பூரண உரிமை இருக்கிறது. அது போன்றே ஊடகங்களுக்கு நாட் டில் நடக்கும் சம்பவங்களை மக்களுக்குத் தெரியப் படுத்த வேண்டிய கடமையும், பொறுப்பும் இருக்கிறது என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

ஒரு ஊடகம் நாட்டில் நடக்கும் சம்பவங்களை- அதிலும் உள்ளூரில் நடக்கும் சம்பவங்களை உறு திப்படுத்தி செய்தியாகக் கொடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட ஆதாரபூர்வமான சம்பவங்களை மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு அரச அதிகா ரிகளின் ஒத்துழைப்பும், ஆதரவும் ஊடகங்களுக்கு எப்போதும் அவசியமாகும்.

அரசாங்க சட்ட திட்டங்கள் என்ற போர்வையில் சில அரச அதிகாரிகள் ஏதேச்சாதிகாரப் போக்குடன் செயற்பட முனைவதால், ஊடகங்களால் தமது கட மையை - மக்களுக்குக் கொடுக்க வேண்டிய தக வலை உரிய வேளையிலும், சரியாகவும் கொடுக்க முடியாதநிலை அடிக்கடி ஏற்படுகிறது.

ஈராக்கிலோ அல்லது உலகின் வேறெந்த மூலை முடுக்கிலோ நடக்கக்கூடிய செய்திகளை உடனுக் குடன் தெரிந்துகொள்ள வசதிகளும், ஒத்துழைப்பும் நமக்குக் கிடைக்கின்றபோது, உள்ளூரில் மட்டும் ஏன் இத் தனை கெடுபிடிகள்?

கொழும்பிலோ அல்லது வேறெந்தப் பகுதியிலோ நடக்கக் கூடிய சம்பவங்களை உடனுக்குடன் உறு திப்படுத்தி - செய்தி தரக்கூடிய நிலையில் வைத்திய சாலைகள் இருக்கின்றன.

ஆனால், இங்கு மட்டும் செய்தியாளர்கள் செய்தி களைத் திரட்டுவது குதிரைக்கொம்பாகவுள்ளது. செய்தியாளர் - அவமதிப்பு மிரட்டல்களுக்கு ஆட்பட வேண்டியவர்களுக்குக் கெடுபிடிகள் இடம்பெறுகின்றன.

சண்டைக் காலங்களில், ஆபத்தான சூழ்நிலை யில் ஒத்துழைப்பு வழங்கிய அதிகாரிகள் - இப்போது மட்டும் சம்பவங்களை உறுதிப்படுத்துவதற்கும், தக வல்கள் திரட்டுவதற்கும் முடியாதிருக்கிறதென்றால், அது வியப்பாக இருக்கிறது.

இத்தகைய அதிகாரிகள் சிலர் ஊடகங்களுக்குச் செய்திகள் வழங்குவதற்கு மறுப்பதன் மூலம் என்ன இலாபம் அடையப் போகிறார்களோ தெரியவில்லை.

ஆனால், ஒட்டுமொத்த மக்களும் தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையையும், ஊடகங்க ளின் செய்தி சேகரிக்கும் சுதந்திரத்தையும் இவர் கள் மீறுகிறார்கள் என்பது மட்டும் உண்மை.

செய்தியாளர்கள் மீது பாயும் அதிகாரிகள் - நேற்று முன்தினம் இடம்பெற்ற ஒரு சம்பவத்தின் பின்னர்- அரச அலுவலகமொன்றில் கூடி நின்றவர்கள் அங் குள்ள ஊழியர்களை மிரட்டியதை ஏனோ கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டனர்.

பேனாவை மட்டுமே தமது ஆயுதமாகக் கொண்டு - எப்படியாவது மறுநாள் மக்களுக்குத் தகவல் திரட்டிக்கொடுத்து விட வேண்டும் என்று துடிக்கும் செய்தியாளர்களை அரச அதிகாரிகள் எதிரிகளாகப் பார்ப்பது எவ்வகையிலும் பொருத்தமற்றது.

இனிவரும் காலத்திலாவது, இப்படிப்பட்ட துர திஷ்டவசமான சம்பவங்கள் நிகழாமல் - ஊடகங் களுடன் அரச அதிகாரிகள் ஒத்துழைப்பது அவ சியம். அரச அதிகாரிகள் மக்களுக்கு எவ்வகையில் சிறந்த சேவையாளர்களாக இருக்கிறார்களோ - அதுபோன்றே ஊடகங்களும் தமது சேவையை மக் களுக்கு ஆற்ற அதிகாரிகளும் ஒத்துழைப்புக் கொடுப் பது அவசியமல்லவா?

## நாடும் நடப்பும்




# அரசு தமிழ் மக்களையும், புலிகளையும் மீண்டும் யுத்தத்துக்குள் திணிக்கிறது!

## அப்பாத்துரை விநாயகமூர்த்தி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசு தமிழினத்தையும், தமிழீழ விடுதலைப் புலி களையும சீண்டி மீண்டும் ஒரு யுத்தத்தைத் தமிழர்கள் மீது திணித்துவிடும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறது.

ஜனாதிபதி தனது கருத்துக்களைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரூடாக வெளிப்படுத்தி வருவதான சந்தேகம் தமிழ் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது. தமிழ்பேசும் மக்களது பொறுமை இன்று கடுமையான சோதனைக்குள் தள்ளப்பட்டுள் ளது. இது பாரிய பின் விளைவுகளை உருவாக்கும் என தமிழ் மக்கள் அச்சமடைகின்றனர்.

இலங்கை அரசாங்கம் - தமிழ் மக்கள் மீதும், விடுதலைப் புலிகள் மீதும் யுத்தத்தை திணித்துவிடும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, வவுனியா ஆகிய பகுதிகளில் இருந்து வருகைதந்து கலந்து கொண்ட கட்சி செயற்குழு உறுப்பினர்கள் மத்தியில் உரை யாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் இனத்தினதும், அவர்கள் தம் ஏக பிரதிநிகளான தமிழீழ விடுதலைப் புலிகளினதும், ஆழ்ந்த பொறுமையைச் சோதிககாது, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யினை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு, சமாதானப் பேச்சு வார்த்தையை மீள ஆரம்பிக்க வேண்டும் என்றும் -

காலத்தை வீணே கடத்துவதனாலும், தேவையற்ற வார்த் தைப்பிரயோகங்களை சல்லாபிப்பதனாலும் இந்த நாட்டிலே மீண்டும் ஒரு யுத்தத்தினை அரசாங்கம் தமிழ் மக்கள் மீது திணிபபதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துவருவதை நிறுத் திக் கொள்ளுமாறும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கேட்டுக் கொள்கின்றது.

வடக்கு - கிழக்கு பிரதேசம் உட்பட இலங்கையினது அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஜப்பான் நாட்டினால் 263.9 மில்லி யன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்க உறுதியளிக்கப் பட்டிருப்பதாக தேசியப் பத்திரிகைகள் மற்றும் அரச தொடர்பு சாதனங்களில் இருந்து அறிய முடிகின்றது.

இது உண்மையானதாக இருப்பின், இலங்கைத் தீவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக் கப்பட்டு, தமிழினம் கோரிநிற்கும், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அமைக்கப்படும் வரை ஜப்பான் வழங்க உத் தேசித்துள்ள நிதியுதவியை இடைநிறுத்திவைக்குமாறு கோரி அந்த நாட்டு தூதுவராலயம் ஊடாக மகஜர் அனுப்புதல் வேண்டும்.

அண்மையில் மட்டக்களப்பு காயங்கேணிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப். கேணல் பாவா மற்றும் புனர்வாழ்வுப் பொறுப்பாளர் லெப்.கேணல்.யோகா ஆகிய இருவரையும் இராணுவப் படைமுகாமிற்கு அருகில், படையினரது ஒத்துழைப் போடு கொலைசெய்யப்பட்ட சம்பவத்தினை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வன்மையாகக் கண்டிக்கிறது.

இதேபோன்று, கடந்த 7 ஆம் திகதி மட்டக்களப்பு பிரதேசத தில் புல்லுமலை எல்லை நிலைமீது படையினர் தமிழினத் துரோகிகளுடன் இணைந்து நடாத்திய தாக்குதல் சம்பவத்தை யும் போர்நிறுத்தத்தைக் குழப்ப எடுக்கப்பட்ட சதிவேலையா கவே உள்ளது.

தொடர்ந்தும் இவ்வாறான பொறுமையைச் சோதிக்கும் விசமத்தனங்களில் இலங்கைப் படையினர் ஈடுபடுவார்களாயின், அது முழு இலங்கைத் தீவையுமே மிக மோசமாகப் பாதித்து நிற்கும என்பதை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சுட்டிக் காட்டவிரும்புகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (31)

# கொழும்புக்கு ஏற்றப்படும் கடலுணவுப் பொருட்கள் படையினரின் சோதனையால் பழுதடைகின்றன!

## புதிய நடைமுறையைப் பின்பற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களிலிருந்து கொழும்புக்கு எடுத்துச்செல்லப்படும் கடலுணவுப் பொருட்கள் ஓமந்தை இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து இராணுவத்தினரால் துருவித் துருவிச் சோதனையிடப்படுவதால் மீன்கள் பழுதடைவதாக வும், இந்த நடைமுறையை மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு-

வடமராட்சி மீனவர்கள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர். அந்த மகஜரில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது -

வியாபாரிகள் கொழும்புக்கு எடுத்துச்செல்லும் மீன் மற்றும் கடலுணவுப் பொருட்கள் அடங்கிய பெட்டிகள், ஓமந்தையில் வைத்து இராணுவத்தினரால் முற்றாகக் கொட்டப்பட்டு, மீண்டும் பெட்டிகளில் அடைக்கப்பட்டே கொழும்புக்குக் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகின்றன. இதனால் இந்தப்பகுதிகளிலிருந்து எடுத்துச்செல்லப்படும் கடலுணவுப் பொருட்கள் விரைவாகப் பழுதடைகின்றன. இதன் காரணமாக கொழும்புச் சந்தைகளில் தென்பகுதிகளிலிருந்து கொண்டுவரப்படும் மீன்களுக்குக் கிடைக கும் விலைகளைவிட மிகக்குறைந்த விலைக்கே வடபகுதி மீனவர்கள் தமது மீன்களைச் சந்தைப்படுத்தவேண்டிய பரிதாப நிலைமை ஏற்பட்டுவருகிறது.

எனவே, இங்கிருந்து எடுத்துச்செல்லப்படும் கடலுணவு வகைகளை ஓமந்தை இராணுவ சோதனை நிலையத்தில் கீழே கொட்டி சேதமாக்குவதைத் தவிர்த்து, பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தேவைப்படும் சோதனை களைச் செய்து மீனவர்களது கடலுணவுப் பெட்டிகள் தாமத மின்றியும், பழுதடையாமலும் கொழும்புக்குக் கொண்டுசெல் வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துதரும்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பகுதியைச் சேர்ந்த முனை கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், இன்பருட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகியன இணைந்து இந்த மகஜரைக் கையளித்துள் ளன. (31)

# பாவனைக்குதவாத அரிசி குடத்தனையில் அழிப்பு!

வடமராட்சி கிழக்கில் நிவாரணம் வழங்குவதற்காக களஞ்சி யப்படுத்தப்பட்டிருந்த மனிதப் பாவனைக்கு உதவாத அரிசி சுகாதாரப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது.

குடத்தனையிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அந்தக் கிராம மக்களுக்கு வழங்குவதற்காகக் களஞ்சியப் படுத்தியிருந்த 130 கிலோ அரிசி, சுகாதாரப்பிரிவினர் மேற் கொண்ட சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது.

வண்டு, பூச்சிகள் நிறைந்திருந்த அரிசியைக் கண்டெடுத்த அம்பன் சுகாதாரப் பரிசோதகர், அதனை மனிதப் பாவனைக்கு உதவாதென உறுதிப்படுத்திய பின்னர் அழிக்கப்பட்டது.

சர்வதேச அரசியல் நோக்கு

கே.ரி.கணேசலிங்கம்

# இந்திய - பாகிஸ்தான் பேச்சுக்களும் பாகிஸ்தானின் தந்திர நகர்வுகளும்



இந்திய - பாகிஸ்தான் பேச்சுக்கள் நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சியாக முடிவடைந்துள்ளன. பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் கே.எம்.கசூரிக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்குக்கும் இடையில் நிகழ்ந்த இரண்டுநாள் பேச்சுக்களும் எதிர்பார்க்கைக்கு முரணாக முடிந்தது. பேச்சுவார்த்தை என்பது சிறந்த இராஜதந்திரம் என்பதை இருநாட்டுத் தரப்புக்களும் நடத்திக் காட்டினர். ஆனால், இந்த இராஜதந்திர உரை



யாடலில் எந்த நாடு வெற்றிபெற்றது என்பதே தற்போதுள்ள பொதுவான கேள்வியாகும். இந்தப் பேச்சுவார்த்தைக்கான அடிப்படைகளையும், எடுக்கப்பட்ட முடிவுகளையும் தெளிவாக விளங்கிக்கொள்வோமாயின் அதனை இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

இரண்டு தரப்பினதும் பேச்சுவார்த்தைக்கான அடிப்படைகளை நோக்குவோம் - இந்தியாவைப் பொறுத்தவரை பொருளாதாரப் பாய்ச்சலை வேகப்படுத்தும் நோக்கத்துடனும், பாரதீய ஜனதாக் கட்சிக்குப் புறம்பான அரசியலைச் செய்யதாட்ட வேண்டும் என்ற அவாவுடனும் ஆட்சியைப் பிடிக்கும் சூழலில் கூட்டணிக் கட்சிகளின் அபிலாஷைகளை நிறைவு செய்கின்ற நிலையில் செயற்பட வேண்டிய நெருக்கடிக்குள் மன்மோகன் சிங் அரசாங்கம் உள்ளது.

அதனுடன் தெளிவான அரசியல் கொள்கையும் இல்லாத அரசாங்கமாக விளங்குவதனால் அதனால் திட்டமிட்டுத் தந்திரமாக நகர்வுகளை ஏற்படுத்த முடியாதுள்ளது. அதனாலேயே காங்கிரஸின் பழைய தலைவர்களையும், அவர்களது அரசியல் கொள்கைகளையும் அடிக்கடி நினைவுகூருகின்ற அரசாங்கமாகவுள்ளது. பாகிஸ்தான் அரசியல் பிரச்சினைக்கு சில்மா உடன்படிக்கையின் கீழே இன்றும் தீர்வுகாண விளைகின்றது மன்மோகன்சிங் அரசாங்கம். எனவே, இந்தியதரப்பைப் பொறுத்தவரை பிராந்திய சர்வதேச இலக்குச்சார்ந்த நகர்வெதனையும் இந்த உரையாடலில் கொண்டிருக்கவில்லை எனலாம்.

ஆனால் பாகிஸ்தான் - பேச்சுக்களுக்கு சமுகமளிப்பதற்கும் வலுவான பல காரணங்கள் காணப்பட்டது. பாகிஸ்தானின் அரசியல்



சூழல் மிக நெருக்கடியான காலகட்டத்தில் சிக்கியுள்ளது. தலிபான்களையும், அல்கொய்டாவையும் எதிர்க்க முயன்றதால், உள்நாட்டிலும் ஆப்கான் எல்லையிலும் மிகத் தீவிரமான இராணுவ நெருக்கடியைக் கொண்ட சூழல் ஏற்பட்டுள்ளது. அத்துடன், அமெரிக்க அரசியல் இராணுவ நகர்வுகளுக்குள்ளும் பாகிஸ்தான் சிக்கித்தவிக்கின்றது. அதாவது பாகிஸ்தான், அமெரிக்காவைத் திருப்திப்படுத்த முயன்றதால் தலிபான்களதும், அல்கொய்டாவினதும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கிறது. இதனால் பாகிஸ்தான் அமெரிக்காவில் பயங்கரவாத எதிர்ப்புப் பட்டியலுக்குள் அடங்கியிருப்பதுடன் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு ஒத்துழைத்தும் வருகின்றது. இதனால், இந்தியாவைக் கையாள முடியுமெனவும் பாகிஸ்தான் கணக்குப் போட்டுச் செயல்படுகின்றது. பொருளாதார, இராணுவ உதவிகள் மட்டுமல்ல - இந்தியாவின் ஆபத்திலிருந்தும் பாகிஸ்தான் பாதுகாக்கப் படுகின்றது. எனவேதான், பாகிஸ்தான் இஸ்லாமிய நாடாக இருந்துகொண்டு இஸ்லாமியத்தின் அடிப்படைவாதத்துக்கு எதிராகப் போராடுகின்றது. எனவே, பாகிஸ்தான் தனக்கு ஏற்பட்ட நெருக்கடியை எதிர்கொள்வதற்கு இந்தியாவுடன் சமாதான உரையாடலைக் கையாண்டு வருகிறது. நெருக்கடி தீர்ந்துவிட்டால், எல்லையோர மிரட்டலைத் தொடரும் என்ற நிலையே காணப்படுகின்றது.

எனவே, இரண்டு அரசுகளதும் நெருக்கடியின் அளவை ஒப்பீடு செய்வோமாயின் இந்தியாவின் இலக்குகளைவிட பாகிஸ்தானின் இலக்கும், நெருக்கடியும் அதிகமானதாகவே அமைந்துள்ளது. இதனால், சூழலைப் பொறுத்தவரை பாகிஸ்தான் அதிக அபாயத்தின் எச்சரிக்கையிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான தயார்படுத்தலாகவே உரையாடல் அமைந்துள்ளது. மிகப்பாதுகாப்பான வேலையில் இறங்கியுள்ள பாகிஸ்தான் யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க விரும்பியதுடன் அதன் பிரதான இலக்கும், முழுமையான இலக்கும் அடையப்பட்டுவிட்டது. யுத்தநிறுத்தத்தை நீடிப்பதனால் பாகிஸ்தான் தனது படைகளை ஆப்கான் எல்லையோரங்களில் குவிக்கவும், தொடர்ந்து தாக்குதலை நிறைவு செய்யவும் முடிகிறது. இதனால் பாகிஸ்தான் இருபக்கமும் பாதுகாக்கப்படுகிறது மட்டுமன்றி, பாகிஸ்தான் - அமெரிக்க உறவும் பாகிஸ்தான் - இந்திய உறவும் பேணப்படுகின்ற நிலை வலுவானதாக அமையும். எனவே பாகிஸ்தானின் தந்திரம் ஒரே நேரத்தில் அதிகமான இலக்குகளை அடைய முயன்றுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்து இரண்டு நாடுகளும் சந்தித்த போது அடையப்பட்ட உடன்பாடுகளையும், எதிர்காலத்தில் மேற்கொள்வதற்காக விடப்பட்டுள்ள விடயங்களையும் விரிவாக நோக்குவோம்.

இருநாடுகளுக்கும் இடையில் கடந்த 2003 நவம்பர் 25 ஆம் திகதிமுதல் சண்டை நிறுத்தம் அமுலில் இருந்துவருகின்றது. இதனை நீடிப்பது -

⊗இந்தியப் பிரதமரும் பாகிஸ்தான் அதிபரும் நியூயோர்க்கில் நடக்கும் ஐக்கியநாடுகள் பொதுக்கூட்டத்தில் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள்.

⊗சார்க் அமைப்பின் தலைவர் என்ற வகையில் பாகிஸ்தான் தலைவர் இந்தியாவுக்கு இந்த ஆண்டு இறுதிக்குள் பயணம் செய்வார். அடுத்த ஆண்டு ஜனவரியில் இருநாட்டுத் தலைவர்களும் டாக்காவில் நடக்கவிருக்கும் சார்க் மாநாட்டின்போது பேச்சு நடத்துவார்கள்.

⊗டெல்கிப் பேச்சுக்களின்போது எட்டப்பட்ட முன்னேற்றங்கள் அமைதி, பாதுகாப்பு தொடர்பான நம்பிக்கைகள் பற்றி இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்களும் எதிர்வரும் டிசெம்பரில் இஸ்லாமாபாத்தில் பேச்சு ஒன்றை நடத்துவார்கள்.

⊗சியார்சென், உல்லார் அணைக்கட்டு, தும்புல் கடற்படைத்திட்டம், சர்கீரீன் எல்லைப் பிணக்கு, தீவிரவாதம், போதை கடத்தல், பொருளாதாரம், வர்த்தக ஒத்துழைப்பு போன்றவை பற்றி பேச்சின்போது முடிவு எட்டப்படும்.

⊗சில்மா ஒப்பந்தத்தை அமுல்படுத்த இருநாடுகளும் உறுதியாகச் செயல்படுதல்.

⊗ஸ்ரீநகர் - முசாரபாத் இடையேயான பஸ் போக்குவரத்து தொடங்குவது பற்றி இருநாட்டு நிபுணர்குழு விரைவில் பேச்சு நடத்தும்.

⊗நவீன ஆயுதங்கள், ஏவுகணைகள், அணு வாயுதங்கள் பற்றிய பிரச்சினை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மற்றும் ஏவுகணை சோதனையின்முன் பரஸ்பரம் தகவல் தெரிவிப்பதுபற்றி நிபுணர் மட்டத்தில் பேச்சு இடம் பெறும்.

⊗முனாபாவோ - கோக்ராபர் இடையில் ரயில் போக்குவரத்துப் பற்றி ரயில் அதிகாரிகள் பேசுவர்.

⊗மக்கள் தொடர்பை அதிகரிக்க புதிய விசாமுறைமை அறிமுகம்.

⊗தீவிரவாதம், வன்முறையற்ற சூழ்நிலையை உருவாக்க உறுதியான நடவடிக்கைக்கு வெளியுறவு அமைச்சர்கள் உறுதியளித்துள்ளனர்.

இவ்வாறு அதிக அம்சங்களைப் பற்றிக் கலந்துரையாடியபோதும் இருதரப்பும் பேச்சுக்களின்போது இணங்கிய அம்ச யுத்த நிறுத்த உடன்பாட்டைத் தொடர்வதென்பதாகும். ஏனைய விடயங்கள் அனைத்தும் அடுத்த டிசெம்பர், இந்த ஆண்டு இறுதி மாதம், இஸ்லாமாபாத்திலும், நியூயோர்க்கிலும் கூடவுள்ள சந்திப்புகள் எனக் காலத்தை ஒத்திப் போடும் இராஜதந்திரமாக உள்ளது. இதில் அதிக உரையாடல் இந்தியாவுக்கு வெளியே நிகழவுள்ளது.

குறிப்பாக அமெரிக்காவிலும், பாகிஸ்தான், பங்களாதேஷிலும் ஏற்படும் சந்திப்பு



களில் இந்தியத் தரப்பின் வலு எப்படி இருக்கும் என்பது சந்தேகமானதே. அத்துடன் அத்தகைய இடங்களில் இந்தியாவுக்கு சாதகமான உரையாடல் நிகழும் என்பது ஐயமான அம்சமாகவே உள்ளது. ஒருவகையில் பார்த்தால் பாகிஸ்தான் இந்தியாவிடமிருந்த செயல்திட்ட அமுலாக்கங்களை தனக்குரியதாக மாற்றிவருகின்றது. அனைத்து விடயங்களிலும் காலதாமதம் மட்டுமே நிகழ வாய்ப்பிருக்கும்.

குறிப்பாக ரயில் போக்குவரத்து, பஸ் போக்குவரத்து, ஈரானிலிருந்து குழாய் மூலமான நிலநெய்பரிமாற்றம், தொலைத்தொடர்பு அடங்கலான தொழில் நுட்ப விடயங்களில் பாகிஸ்தானைவிட இந்தியா பலமாகவே உள்ளது. அதனை முடிவெடுப்பதென்பது அதிகாரிகள் மட்டத்திலான செயல்பாடல்ல. எடுக்கப்படும் முடிவை அமுல்படுத்துவதுதான் அதிகாரிகளது கடமையாகும். அரசாங்கம் என்பது நாட்டுக்குரிய தெளிவான கொள்கையை வகுத்துவிட்டு அவற்றை அமுலாக்கம் செய்வதற்குத்தான் அதிகாரிகளை வைத்துள்ளது. அதிகாரிகள் கொள்கைவகுப்பாளர்களாக காணப்பட்டால் அதிகாரிகளை அரசாங்கத்தின் கொள்கை வகுப்பாளர்களாக மாற்றுவதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது. அவ்வாறான வேலையை நோக்கியே இப்பேச்சுவார்த்தை நகர்ந்துள்ளது. இந்தியத் தரப்பு தெளிவான கொள்கையைக் கொண்டிருக்காத செயற்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததென இந்தியத் தரப்பு வெளிப்படுத்தவில்லை. மாறாக பாகிஸ்தான் தரப்பே பேச்சுக்கள் நெருக்கடியில், முட்டுக்கட்டையில் முடிந்துள்ளதென கூறியிருந்தது.

உண்மையில் எல்லை தாண்டிய பயங்கரவாதம், காஷ்மீர் பிரச்சினை இரண்டுமே பேச்சுக்களை குழப்பிய காரணியாகும். இந்தியத் தரப்பு சுதந்திரத்திலிருந்து காஷ்மீருக்காகவே இவ்வளவு அழிவுகளும் நிகழ்ந்ததென்பதை மறந்தே பேச்சுக்களை சுமுகப்படுத்தலாமென கருதியதாக தோன்றுகிறது. இது இந்தியத் தரப்பின் பலவீனமான நிலையாகும். காஷ்மீர் இன்றி பாகிஸ்தான் பேசாது என்பதுபோல் எல்லை தாண்டிய பயங்கரவாதமின்றி இந்தியா பேசாது. இதுவே இரு நாடுகளது பேச்சுக்களின் முடிவும் ஆரம்பமுமாகும்.

காஷ்மீர் விவகாரத்தை எப்படி தீர்க்க வேண்டுமென்பதுபற்றி இரண்டு தரப்புக்குமே தெளிவான பதில் கிடையாது. தற்போது பாகிஸ்தான் இஸ்லாமிய அடிப்படைவாதத்துடன் முரண்பட்டுக்கொண்டிருந்தால், இந்தியா நிம்மதிப் பெருமூச்சுவிடலாமேயன்றி மற்றும்படி காஷ்மீரிய தீவிரவாதிகளைப் பயன்படுத்தியே பாகிஸ்தான் நிலைமையை குழப்பிவிடும். அந்தளவுக்கு தீவிரவாதத்தையோ அல்லது இந்தியா கூறுவது போல் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தையோ பாகிஸ்தான் கொண்டிருக்கின்றது. இதனால் இந்தியா சுமுகமாக தீர்க்க முடியுமென கருதும் காஷ்மீர் விடயமே இருநாடுகளது அரசியலையும் இராணுவ, அரசியல் போக்குகளையும் நிர்ணயிக்கின்றது.

இதில் இந்தியாவைவிட அதிக முக்கியத்துவம் பாகிஸ்தானுக்கே இருக்கின்றது. பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் தமது ஆட்சியை தக்கவைக்க வேண்டுமாயின், காஷ்மீர் பகுதியை தக்கவைப்பதோடு இந்திய எதிர்ப்பை இராணுவரீதியிலும் தந்திரமாகவும் கொண்டிருக்க வேண்டும்.

இந்த உரையாடலில் பாகிஸ்தான் அதிக மானவற்றை சாதித்ததாக இனங்கண்டு கொண்டாலும் இந்தியா வலுவான அரசாகவே காணப்படுகிறது.

அரசாங்கம் என்னவோ பலவீனமாக இருந்தாலும், இந்தியாவின் பொருளாதார, இராணுவப் பலம் உறுதியாகவே காணப்படுகின்றது. ஆனால், இந்தியாவுக்கு நேரடியாக எந்தவித இலாபத்தையும் உடனடியாக ஈட்டிக்கொடுக்காது விட்டாலும் மறைமுகமாக ஒரு இலாபத்தை இந்தியா அடைந்திருப்பதாகக் கூறலாம்.

அதாவது, இஸ்லாமிய அடிப்படைவாதத்தை அழிப்பதற்கு படிப்படியாக பாகிஸ்தானுக்குள் ஊடுருவிவரும் அமெரிக்காவின் பிரசன்னம், பாகிஸ்தான் - இந்திய எல்லையை நோக்கி நகராமல் இருப்பதற்கு இத்தகைய வழிமுறை அவசியமானதாகவே தென்படுகிறது.

ஆனால், அத்தகைய நகர்வு எந்தளவுக்கு பாகிஸ்தானால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதைப் பொறுத்தே இவ்விடயத்தை நோக்கமுடியும். அமெரிக்க எதிர்ப்பு வாதம் பாகிஸ்தான் சிவில் சமூகத்திடம் இல்லாமலில்லை. எனவே, இந்தியாவின் எதிர்பார்க்கையும் நகர்வும் மிகநீண்டகாலத்தை ஒட்டியதாகவே உள்ளது. மற்றைய விதத்தில் நோக்கினால் பாகிஸ்தான் தரப்பு அதிக இலாபத்தை தந்திரமாக அடைந்துள்ளதெனலாம்.

எனவே - பாகிஸ்தான் சிறிய நாடாக விளங்கியபோதும், இராஜதந்திரத்தினால் இந்தியாவை முறியடிக்கும் பணிகளில் ஈடுபட்டுவருகிறது. இதனை ஆர்க்கா மாநாட்டின் தொடராகவே கொள்ளமுடியும். இவ்வாறு மேற்கொள்ளப்படுவதால் நாடும் ஆட்சியும் பாதுகாக்கப்படுவதுடன் முஷாராப் தந்திரசாலி என்பதை நிறுவிவருகிறார்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

88. யா/க/3173 திருமதி. சுந்தரேஸ்வரி சிவசிதம்பரம்
89. யா/க/3193 திருமதி. மலர்விழி பவானந்தன்
90. யா/க/3199 திருமதி. மாலதி பிரான்சிஸ்
91. யா/க/3250 திரு. கந்தையா பொன்னம்பலம்
92. யா/க/3269 திரு. ஏகாம்பரம் தில்லையம்பலம்
93. யா/க/3280 திருமதி. இராசமலர் அந்தோனிப்பிள்ளை
94. யா/க/3285 திரு. கந்தையா சிவஞானசுந்தரம்
95. யா/க/3294 திரு. சரவணமுத்து பரமசாமி
96. யா/க/3299 திரு. கந்தையா சின்னத்துரை
97. யா/க/3366 திரு. கணபதிப்பிள்ளை சின்னையா
98. யா/க/3464 திரு. தம்பு கணபதிப்பிள்ளை
99. யா/க/3488 திரு. சின்னத்தம்பி வீரகத்தி
100. யா/க/3527 திரு. ஐயாத்துரை சிவனேந்திரன்
101. யா/க/3540 திரு. சுப்பர் நவரத்தினம்
102. யா/க/3562 திரு. வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம்
103. யா/க/3582 திரு. வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம்
104. யா/க/3610 திரு. கணேசக்குருக்கள் உதயசங்கர்
105. யா/க/3652 செல்வி. இரத்தினசோதி நாகரத்தினம்
106. யா/க/3661 திரு. சிவராசா பாலசுந்தரம்
107. யா/க/3689 திருமதி. சிவசக்தி சின்னையா
108. யா/க/3721 செல்வி. லலிதா இராசலிங்கம்
109. யா/க/3776 திரு. மயில்வாகனம் வீரகத்தி
110. யா/க/3788 திரு. சபாபதி முருகேசு
111. யா/க/3795 திரு. கிருஸ்ணபிள்ளை சதாசிவம்
112. யா/க/3813 திரு. சுப்பையா குட்டித்தம்பி
113. யா/க/3820 திரு. சின்னத்தம்பி செல்லத்துரை
114. யா/க/3852 திரு. சின்னப்பிள்ளை
தாமோதரம்பிள்ளை
115. யா/க/3865 திரு. அருளம்பலம் இராசேந்திரம்
116. யா/க/3879 திரு. சிவகுரு சிவலோகம்
117. யா/க/3881 திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்
118. யா/க/4052 திரு. கல்யாணசுந்தரக்குருக்கள்
கனகசபாபதி
119. யா/க/4079 திரு. வல்லிபுரம் உதயகுமார்
